# வயது பதினாறிருக்கும்!





Dr. லில்லியன் ஸ்டான்லி

# வயது பதினாறிருக்கும்

Dr. Mrs. **லில்லியன் ஸ்டான்லி**, M.B.B.S., D.C.H.,
*மருத்துவ மிஷனரி*

*வெளியிடுவோர்:*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி: 0416-2242943, 2248943
<bym@sancharnet.in>
www.blessingyouthmission.org

**SWEET SIXTEEN** (TAMIL)

Copyright 1985 Dr. LILIAN STANLEY

First Edition : December 1985
Seventh Edition : May 1999
Eighth Edition : June 2001
Ninth Edition : May 2006
This Edition : January 2009

இப்புத்தகம் ஆங்கிலத்திலும்
மற்றும் பல இந்திய மொழிகளிலும் உண்டு.

Printed by
Bapuji Printers
5 Kurban Ali Street
Woods Road
Chennai 600 002.

# துவக்கவுரை

வாழ்க்கையில் வழுக்கி விழும் வாலிபப் பெண்களை உலகம் எள்ளி நகையாடுகிறது, குற்றம் சாட்டுகிறது, ஒதுக்கி விடுகிறது. இவர்களுக்கு நமது பொறுப்பில் நாம் தவறி விட்டோம் என்பதே நானறிந்தது. வருமுன் காப்பது மேல் என்ற முதுமொழிக்கேற்ப வாழ்க்கையின் வலைகளை வாலிபப் பெண்களுக்கு விளக்கி, தக்க அறிவை ஏற்ற காலத்தில் புகட்டிவிட்டால் அவர்கள் தங்களை எளிதாய்க் காத்துக்கொள்வர்.

எனது வாலிப நாட்களை நான் பின்நோக்கி, நடந்து வந்த இருண்ட பாதைகளை நினைக்கும்போது, இப்படிப்பட்டதோர் புத்தகம் என் கையில் சிக்கியிருந்தால் எத்தனை வெளிச்ச மடைந்திருப்பேன் என்ற கற்பனையுடன் இப்புத்தகத்தை எழுத முற்பட்டேன். கடந்த பல ஆண்டுகளில் பெண்கள் நடுவில் செய்த ஊழிய அனுபவமும் கைகொடுத்தது. கடவுள் எனக்குக் கிருபையாய்த் தந்துள்ள மருத்துவ அறிவையும் அவர் சேவையில் ஊற்றும் ஒரு தருணமாக இப்புத்தகத்தைப் பயன்படுத்தியுள்ளேன். நங்கையர்கள் கிறிஸ்துவுக்காய் நறுமணம் வீசவேண்டும் என்ற ஜெபத் துடன் இப்புத்தகத்தை அவர் பாதம் சமர்ப்பிக்கிறேன்.

இப்புத்தகம் ஒருவேளை வயதானவர்களுக்கும் நாகரீகத் திற்கு ஒதுங்கி வாழ்பவர்களுக்கும் சற்று ஆபாசமாகத் தெரியலாம். ஆனால் இப்புத்தகம் உங்களுக்குரியதல்ல என்பதை தயவுசெய்து நினைவில் வையுங்கள். இன்றைய உலகின் பிரச்னைகளைச் சந்திக்கும் 16 வயது நங்கைக் குரியது என்று அறிந்து சற்றே பொறுத்துக்கொள்ளுங்கள். எத்தனையோ வாலிபப் பெண்கள் ஆலோசனை கேட்டு என்னிடம் வருவதுண்டு. அவர்களது கேள்விகள்தான் இப்புத்தகமாக வடிவெடுத்துள்ளன. இவையெல்லாம் தேவைதானா என்ற கேள்வி உங்களுக்கு எழுமானால், வாலிபப் பிள்ளைகள் உங்களிடம் இன்னும் உள்ளம் திறந்து பேசவில்லை என்றுதான் நினைக்கிறேன்.


*—ஆசிரியர்*



***முக்கிய குறிப்பு:***

*இப்புத்தகத்தில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே.*

# 1 ஓடும் இரயிலினிலே ...



ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தன. மாலாவும் வெற்றியோடு தேறினாள். கதாநாயகனோ வந்து சேரவில்லை.

வயது பதினாறிருக்கும். அழகு என்று சொல்வதற்கில்லை, ஆனால் விரும்பத்தக்க ரூபம். மா நிறம். எண்ணெய் வைத்துத் தலை வாரி முத்து முத்தாய் இரட்டைப் பின்னல் போட்டு முடித்துக் கட்டியிருந்தாள். சிறு சுருள் கன்னத்தை அடிக்கடி முத்தமிட்டுக் கொண்டிருந்தது. உடலைத் தழுவிய டார்க் ப்ளூ ஜாக்கெட், அதே வண்ணப் பொட்டு. கையில் திறந்த நாவல். கண்கள் மட்டும் இரயிலோடு போட்டிபோட்டு ஓடும் காட்சியில். நாவல் கற்பனையில் ஓடுகிறது என்று புரிந்து கொண்டேன். கண்ணிமைகளைக் கொட்டினாள்.

வீட்டில் ஒரே பிரச்சனை. ஒரே ஏச்சும் பேச்சும்தான். இத்தனை கண்டிஷன் போட்டால் எவன்டி உன்னைக் கட்டுவான் என்கிறார்கள். பல கடிதங்கள் வருகின்றன. ஜூன் மாதத்தில் வீட்டில் வந்து இறங்கிவிடுவார்களாம்.

“...களையெல்லாம் டயரியில் குறித்து வைத்திருக்கிறேன். வாசித்து என்னையே திடப்படுத்திக் கொண்டு ஜெபிக்கிறேன். ...ப்படும்போது என் will powerரே உடைந்து போகிறது. நேற்று ஒரு கடிதம் வந்தது. என் கசின் கனடாவிலிருக்கிறார். ...எழுதியிருக்கிறார். ரொக்கமே வேண்டாம், கட்டிக் கொடுத்தால் போதுமென்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரைக்கு இவர் இரட்சிப்பிற்குத் தூரமானவரல்ல.”

“ஓகோ, பக்கத்திலிருக்கிறாரக்கும். இந்த பக்கத்து இரட்சிப்பு தூரத்து இரட்சிப்பு எல்லாம் எந்த தியாலஜிக்கல் காலேஜில் படித்தாய் ?”

“ஐ ஸீ”

“நான் ஒன்றும் பாசிடிவ்வாகச் சொல்லவில்லையக்கா. ஒரு வேளை கனடா போனபிறகு இரட்சிக்கப்பட்டிருக்கலாம். உங்களுக்கு ஏதாவது வெளிப்பாடு இருக்குமோ என்று நினைத்தேன்.”

உன் வேலையைப் பாரேன் என்பது போலிருந்தது அவள் பாவனை.

“ உன் பேரென்னம்மா ?”

“ஆமாமாம், நிறைய வெளிப்பாடு இருக்கிறது. இப்படி உட்காரு சொல்லுகிறேன். இந்தக் கதைய கேளு.

“மாலா”

“பூவாள் என்றொருத்தி இருந்தாளாம். அவளுக்குக் கடவுள் தனக்கு இஷ்டமானவனாகவும் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம்பண்ணிக் கொள்ளலாம்” (1 கொரி 7:39; எண் 36:9) என்று இஷ்டப்படுவதற்குச் சுதந்திரமும் கட்டிக்கொள்ள கண்டிஷனும் போட்டாராம். பொல்லாத சர்ப்பம் வந்ததாம். அது தாந்திருந்து குளைத்துப்போன அவளை நோக்கி: நீ உலகத்திலுள்ள யாரையுமே திருமணம் பண்ணக் கூடாதென்று கடவுள் சொன்னது உண்டோ என்று கேட்டதாம். கடவுளுடைய வார்த்தையை நன்கறிந்த அவள் வீணாகச் சர்ப்பத்தோடு உறவாட ஆரம்பித்தாளாம்.

என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். முகத்தில் சற்று சலனம் தெரிந்தது.

“அப்படியானால் டாக்டர் லோலைத் தெரியுமா? அவர்கள் என் ஆன்டிதான்.”

“கடவுளே ஸ்தோத்திரம்” என்று உள்ளத்தில் ஜெபித்துவிட்டு கிடைத்த நூலைப் பிடித்துக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தேன். சரளமாய்ப் பேசினாள். மெதுவாய்ப் பேச்சைத் திருப்பினேன்.

நாங்கள் உலகத்தில் யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்யலாம். ஆனால் உலகத்தின் மையத்தில் வாழும் அவிசுவாசியைக் குறித்து கடவுள்: நீ அந்நிய நுகத்திலே அவிசுவாசியோடே பிணைக்கப்படாதிருப்பாயாக. தொடாதே (2 கொரி 6:14), நீ சாகாதபடிக்கு அவனை மணக்கவும் வேண்டாம், தொடவும் வேண்டாம் (ஆதி 3:3) என்று சொன்னார் என்று சொன்னாள். ...நீ சாகவே சாவதில்லை. நிச்சயமாய் உன் ஊக்கமான ஜெபத்தினால் அவனை இரட்சித்துக் கொள்ளுவாய். நீ அவனை மணக்கும் நாளிலே உன் கண்கள் திறக்கப்படும் என்றும், நீ கடவுளைப்போல பறந்து கனடா செல்வாய் என்றும் தேவன் அறிவார் என்றதாம்.

“எம்மாலா, இவ்வித நாவல்களெல்லாம் நன்றாகவா இருக்கிறது ? உன் சிந்தனைகளைக் கறைப்படுத்துகிறதல்லவா ?”

“மாலா, இந்த உலகம் பிசாசுக்குள் கிடக்கிறது. ஆகவே பாவத்தால் நிறைந்திருக்கிறது. ஏன்வேதான் நாமும் பாவத்திற்கு அடிமைகளாயிருக்கிறோம்.

“அப்பொழுது பூவாள் அந்தப் பையன் வாழ்க்கைக்கு நல்லவனும், பார்வைக்கு இன்பமும், பட்டம் பெற்ற ஞானியுமாயிருக்கிறான் என்று கண்டு கழுத்தை நீட்டித் தாலிகட்ட விட்டாளாம். அவனும் மணந்தானாம். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டதாம். கண்கள் திறந்தவுடன் கண்ணீர் கொட்டியதாம். என்ன புரியுதா ? கம்முன்னு இருக்கியே ?”

பக்கம் மாறாதபடி கவனமாய் ஒரு விரலை வைத்து நாவலை மூடிக் கொண்டாள். எனினும் என்னை நேராய்ப் பார்க்கத் தயக்கம். தைரியமாய்த் தொடர்ந்தேன்.

“பிறகு என்ன ஆச்சாம் ?”

பாவமே நம்மைக் கடவுளை விட்டுப் பிரிக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம். மரணம் என்பது நரகம். பாரு, பிள்ளை தப்பு செய்ததென்று எந்த அப்பாவாவது நெருப்பிலா போட்டுவிடுவார் ? அதுபோலத்தான் நமது பாவங்களுக்காக நம்மை நரகத்தில் போட மனமில்லாதவராக கடவுள் தமது ஒரே மகன் இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அவர் கன்னியாகிய மரியாளுக்குப் பிள்ளையாக மாட்டுக் கொட்டகையில் பிறந்தார். வளர்ந்து பெரியவராகி ஒரு பாவமும் செய்யாதவராய், நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார். அவரைப் பொறாமையினால் சிலுவையில் அறைந்து கொன்றனர். ஆனால், அவர் மூன்றாம் நாள் உயிரோடெழுந்தார்.

“இந்தப் பாரு, இந்தமாதிரி கலியாணத்திலெல்லாம் கத்தரிக்காய்தான் காய்க்கும். அவைதான் சாபமும் (எண் 2:56-9; 31:16), பாவமும் (நெகே 13:26), கடவுள் பயமற்ற பிள்ளைகளுமாம். லேவி 24:10,11. எடுத்து வாசி.

“காத்திருந்ததே காத்திருந்தாய், கடைசியில் கோட்டை விட்டு விடாதே. பெற்றோரிடத்தில் தடால் புடால் என்று பேசாதே. என்னைக் கல்லெறிந்து விடுவார்கள். அன்போடும் பணிவோடும் விளக்கு. ஆனால் உறுதியாக நில். ... நீ விழிக்கும்போது கடவுள் எல்லா ஆயத்தங்களையும் முடித்திருப்பார்.”

எங்கே எதிர்த்துவிடுவாளோ என்ற கவலையில் மடமட வென்று கொட்டினேன்.

''நான் கூட கன்வென்ஷனுக்கு வந்திருந்தேன்.''

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தன. மாலாவும் வெற்றியோடு தேறினாள். [illegible] பேச ஆரம்பித்தேன்.

[illegible]

நான் அறிந்த பாவங்களையெல்லாம் அறிக்கையிட்டேன். தேவன் எனக்குள்ளே ஒரு புதிய ஒளியையும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் ஊற்றினார். இன்று முப்பது வருடங்களுக்கு மேலாகியும், படித்துப் பட்டம் பெற்றும், அந்த [illegible]

[illegible] வசனங்களாகத்தான் எழுதியிருக்கிறார். ரொக்கமே வேண்டாம், கட்டிக் கொடுத்தால் போதுமென்கிறார்கள். எனக்குத் [illegible] நானும் முயன்றுதான் பார்க்கிறேன். என்னால் முடியவில்லையே.''

''ஒகோ, பக்கத்திலிருக்கிறாராக்கும். இந்த பக்கத்து இரட்சிப்பு தூரத்து [illegible] வருவதல்ல. கடவுள் கிருபையாய் அருளும் ஈவு அது. இருதயத்திலிருந்து கெட்ட [illegible] இவைகளே மனிதனைக் கறைப்படுத்தும் என்று வேதம் சொல்லுகிறது. [illegible] விடுவிக்கிறவர் கடவுளே. 2000 ஆண்டுகளுக்கு முன்பாக நமது பாவங் [illegible]

[illegible] உறவாட ஆரம்பித்தாளாம்.

''நாங்கள் உலகத்தில் யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்யலாம். ஆனால் உலகத்தின் மையத்தில் வாழும் அவிசுவாசியைக் குறித்து கடவுள்: நீ அந்நிய நுகத்திலே அவிசுவாசியோடே பிணைக்கப்படாதிருப்பாயாக. தொடாதே (2 கொரி 6:14,17), நீ சாகாதபடிக்கு அவனை மணக்கவும் வேண்டாம், தொடவும் வேண்டாம் (ஆதி 3:3) என்று சொன்னார் என்று சொன்னாளாம். அப்பொழுது சர்ப்பம் பூவாளை நோக்கி: நீ சாகவே சாவதில்லை. நிச்சயமாய் உன் ஊக்கமான ஜெபத்தினால் அவனை இரட்சித்துக்

மாலாவைக் கேட்டார் பெரியவர். மாலாவின் அப்பா போலும். யாவரும் படுக்க ஆயத்தமாயினர். மாலாவும் படுத்துக்கொண்டாள். என் இதயம் துடித்தது. ''ஆண்டவரே, மாலாவை இரட்சியும்'' என முணுமுணுத்தேன். மாலாவை நோக்கினேன். நீல விளக்கொளியில் அவளது முகம் களங்கமற்ற பால் நிலவைப் போலிருந்தது. இன்னும் கண்களை மூடவில்லை. என்னதான் நினைக்கிறாளோ ?

ஏனோ என்னையறியாத பாசம் அவள்மேல் உண்டானது. இந்த வசனம் சொல்லவில்லையே... அந்த வசனத்தை மறந்து விட்டேனே ...

சுக் சுக் சுக் சுக்...

காலை 6 மணி. மாலா நல்ல தூக்கம். 6.30 மணிக்கு அப்பா எழுப்பி விட்டார்.

''எழுந்திரம்மா மாலா, திருவண்ணாமலை வந்து விட்டது.''

பல் துலக்கி வந்தாள்.

''ஹலோ''

''ஹலோ''

வேதத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். ஏதாவது சொல்லுவாள் என்று எதிர்பார்த்தேன். இட்லி வடையை சாப்பிட்டுக்கொண்டேயிருந்தாள். எனக்கு ஏமாற்றம்தான். அவள் பள்ளியைப் பற்றிக் கேட்டேன். ஹையர் செகன்டரி ஸ்டுடன்ட். எனக்கு சுவாரஸ்யமில்லை. வேறு ஏதோ பேசினோம். நாவலை ஏனோ வெளியே எடுக்கவில்லை. எனக்காகவோ ? வேலூர் வந்தது. அப்பாவை எனக்கு அறிமுகப்படுத்தினாள். நான் பஸ் ஸ்டாண்டிற்கு விரைந்தேன்.

''அக்கா''

திரும்பிப் பார்த்தேன்.

''நாங்கள் ட்ராப் பண்ணி விடுகிறோம்.''

கிரீம் அம்பாஸடர் இதமாய்ச் சென்றது.

''தாங்க்யூ.''

கட்டாயம் வீட்டிற்கு வருவதாகச் சொல்லி சென்றாள். வருவாளோ ?

# 2 பொழுது புலர்ந்தது!



ஹார்ன் சப்தம் கேட்டு மாடி ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தேன். க்ரீம் அம்பாஸடர். மாலாவேதான்.

''ஹய்''

''ஹய்''

பொட்டு மறைந்து விட்டிருந்தது.

''வா மாலா.''

''பேரைக்கூட மறக்காமல் வைத்திருக்கிறீர்களே.''

நேரம் கடந்தது. என் மகளுக்குக் கொண்டாட்டம். கெஸ்ட் வந்து விட்டார்கள். படிப்பில்லை. டெரஸிற்கு வந்தோம்.

''அக்கா, அன்று உங்களுடன் பேசியதிலிருந்து எனக்கு நிம்மதியே இல்லை.''

''சொல் மாலா.''

''என்னவோ ஒன்றுமே ஓடவில்லை. படிக்கவும் முடியவில்லை. என் கடந்த கால வாழ்க்கையையே நினைத்து நினைத்து கலங்கிக் கொண்டிருக்கிறேன். செய்த பாவங்களெல்லாம் நினைவில் வருகின்றன. சிநேகிதிகளோடு சேர்ந்து சினிமா கதைகளைப் பேசுவேன். எங்கள் சொந்தக் கற்பனைகளையும் அதோடு சேர்த்து அருவருப்பான கதைகளைத் திரிப்போம். எல்லாருமாக சேர்ந்தே செல்லுவோம். வாசிக்கும் கதைகளைப் பரிமாறிக் கொள்வோம். ஒருவரை



யொருவர் ஒரு வாலிபனுடன் இணைத்து கேலி செய்துகொள்வோம். நல்ல மதிப்பெண்கள் வாங்குவதால் பள்ளியில் நல்ல பெயர்தான். வீட்டுற்குப் பிந்தி வந்தால் சாதாரணமாகப் பொய்சொல்லி பெற்றோரை ஏமாற்றிவிடுவேன் ...''

''மாலா, உன் பாவங்களை என்னிடம் சொல்ல வேண்டாம். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே நீ முழங்கால்படியிடு. ஒன்றையும் மறைக்காமல் கடவுளிடம் உன் பாவங்களை ஒவ்வொன்றாய், குறிப்பாய் அறிக்கையிடு.''

மாலா முழங்கால்படியிட்டாள். அவளது மெல்லிய உதடுகள் துடித்தன. கண்கள் நனைந்தன. கைக்குட்டையால் மூக்கைப் பிடித்துக் கொண்டாள். எதிர்பார்த்த அற்புதம் நடந்துவிட்டது! என் உள்ளம் துள்ளியது. அரை மணி நேரம் ஆகியிருக்கும்.

''மாலா, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். ஆகவே இப்பொழுதே அவருடைய இரத்தம் உன்னைச் சுத்திகரிக்கிறது. ஆண்டவரே, என் இருதயத்தில் வாரும். என்னை உமது பிள்ளையாக ஏற்றுக்கொள்ளும். என் பாவங்களை மன்னியும். இனி பாவம் செய்யாதிருக்க உதவி செய்யும் என்று ஜெபி.''

சிறு பிள்ளைபோல் கீழ்ப்படிந்தாள். அவள் முகத்தில் புது ஒளி. கண்ணீரினால் நனைந்து சேர்ந்திருந்த இமைகள் அழகாய்த் தோன்றின.

''மாலா, இப்போது நீ கடவுளுடைய பிள்ளை. நீ புதிதாகிவிட்டாய். உன்னுடைய பழைய பாவங்களில் வெற்றிபெற கடவுள் கிருபையளிப்பார். ஒழுங்காக காலையும் மாலையும் வேதம் வாசித்து ஜெபி. அடிக்கடி வீட்டிற்கு வா.''

டயரியை எடுத்துக் குறித்துக் கொண்டேன். ''மாலா இரட்சிக்கப்பட்டாள்.''

தனது வாழ்க்கையில் பொழுது புலர்ந்தது என்றறிவாளோ ?

# 3 சிலேட்டை அழி!



ஞாயிறு சாயங்காலம் மாலா வந்தாள்.

“அக்கா, இன்று பிரசங்கம் மனந் திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள் என்ற அடிப்படையில் ஒப்புரவாகுதலைக் குறித்து இருந் தது. கடவுளோடு ஒப்புரவானால் மட்டும் போதாது, மனிதரோடும் ஒப்புரவாகவேண்டும் என மிக நன்றாகப் பேசினார். அதிகமாய் உணர்த்தப்பட்டேன். அப்படியானால் என் பெற்றோரிடம் கீழ்ப்படியாமைக்கும் என் தங்கையிடம் சண்டை போட்டதற்கும் போய் மன்னிப்புக் கேட்க வேண்டுமா? டீச்சரிடம் ஒரு பொய் சொல்லி மூன்று மாதங்களாகிவிட்டன. இப்போது போய்ச் சொன்னால் அவர்களுக்கு அது நினைவில்கூட இருக்காது. என் வகுப்பு மாணவி ஒருத்தியுடன் நான் மூன்று மாதங்களாகப் பேசுவதில்லை. அவள் என்னைப்பற்றி மற்ற மாணவிகளிடம் அசிங்கமாய்ப் பேசினாள். அவளாகப் பேசினால் நான் பேசி விடுவேன். நானாக முதலில் எப்படிப் பேசுவது? கஷ்டம், கஷ்டம். ஏன்தான் சண்டை போட்டேனோ. நீங்கள் இதுகுறித்து ஒன்றுமே சொல்லவில்லையே என்று எண்ணினேன்.”

“ஆம் மாலா. இரட்சிப்பைத் தொடரும் நற்செயல்கள் இவை. நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையை செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூறுவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முன்பு உன் சகோதரனோடு ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து என்று வேதம் கூறுகிறது. ஆகவே இரட்சிப்பின் அடுத்த படி ஒப்புரவாகுதல்தான். அதாவது நீ யாருக்கும் விரோதமாக ஏதாவது செய்திருந்தால் மன்னிப்பு கேட்டுக்கொள். யாராவது உனக்கு விரோதமாய் ஏதாவது செய்திருந்தால் அவர்களை முழுமனதுடன் மன்னித்துவிடு. உள்ளத்தில் கசப்பில்லாதபடி பார்த்துக்கொள்.



“நான்தான் சொல்ல வேண்டுமென்றென்ன? வேத அடிப்படையில் யார் போதித்தாலும் போதனையை ஏற்றுக்கொள்ளவேண்டியதுதானே. கடவுள் தம்முடைய பிள்ளைகளை நடத்தும் முறைகள் ஆச்சரியமானவைகள். அவரது ஆலோசனைகள் வேதத்தின் மூலமாகவோ, ஆவிக்குரிய தலைவர்களின் மூலமாகவோ, நல்ல புத்தகம் அல்லது பத்திரிகையின் மூலமாகவோ, ஒருவர் சாட்சியின் மூலமாகவோ, ஓர் அனுபவத்தின் மூலமாகவோ, உன் மனச் சாட்சியின் மூலமாகவோ, இன்னும் பலவிதங்களில் வரலாம். ஆனால் வசனமே ஆதாரம்.”

“கடவுள் எனக்குத் தேவையான தைரியத்தைத் தர ஜெபியுங்களக்கா. கடவுளோடு ஒப்புரவாவது சுலபமாக இருந்தது. இதுதான் கடினமாகத் தெரிகிறது.”

“தைரியமாய்ப் போ மாலா. ஆண்டவர் கிருபை தருவார். சுத்தமான சிலேட்டுடன் வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும். சிலேட்டை அழித்தால்தான் சரித்திரம் எழுதலாம்.”

# 4 கொண்டாட்டம்!



ஒரு மாதம் கடந்தது. மாலா வைக் காணோமே. முகவரியும் வாங்கவில்லை.

இதோ மாலாவே வந்து விட்டாள்.

"அக்கா, சிக்ஸ்டீன்த் எனக்கு பொர்த்டே. சாயங்காலம் ஐந்து மணிக்கு வந்துவிடுங்கள்."

வீடு அடையாளம் சொன்னாள்.

"இரு மாலா, என்ன அவசரம் ?"

"இல்லக்கா, ஃபிரண்ட்ஸ் எல்லாரையும் இன்வைட் பண்ணணும். மறுபடி வருவேன்."

ஸ்டீரியோ ரிக்கார்டு பிளேயர் இதயத்தை நடனமாடவைக்கும் வகையில் இசைத்துக் கொண்டிருந்தது. அப்ஸராக்கள் போல மாலாவின் சிநேகிதிகள் குழுமியிருந்தனர். பேசினர், சிரித்தனர், பாடினர். இருவர் ஜீன்ஸ்; ஒருத்தி மாக்ஸி; ஒருத்தி மினி; மற்றவர் ஹை சோளி, லோகட் நெக் அன்ட் லோ ஹிப்ஸ். மாலாவின் தங்கையும் பான்ட்ஸ்.

மாலாவின் அண்ணனோடு இரு வாலிபர் பேசிக்கொண்டு ஒரு பக்கமாய் உட்கார்ந்திருந்தனர். மாலாவின் மலர்விழி துள்ளித் துள்ளி அவர்கள்மேல் விழும். அதில் மைனர் மீசைக்காரன் கண்ணும் அவள் மேலேயேதான். மாலாவின் தாயாரோடு பேசிப் பொழுதைப் போக்கினேன். அடுத்த நாள் மாலாவை வரச்சொல்லிச் சென்றேன்.

"மாலா வா, எப்படி இருக்கிறாய் ?"

"இருக்கிறேன்."

"ஒழுங்காக வேதம் வாசிக்கிறாயா ? ஜெபிக்கிறாயா ?"

"ஊம்."



"உன் மனதிலிருப்பதைச் சொல்லு. ஊம், ஊம், என்றால் என்ன அர்த்தம் ? சந்தோஷமாக இருக்கிறாயா ?"

"இங்கிருந்து சென்றபோது ஏதோ புதையலைப் பெற்றவள் போல் சென்றதென்னவோ உண்மைதான். இரண்டு வாரங்கள் நன்றாக இருந்தேன். பெற்றோரே ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் இப்போது அப்படியில்லை."

"உன் சாட்சியைச் சிநேகிதிகளோடு பகிர்ந்துகொண்டாயா ?"

"ம், எல்லாம் பத்து நாளைக்குத்தான். பிறகு புஸ் என்று போய்விடும் என்று சிரித்தார்கள். எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது."

"என்ன மாலா, நீ இங்காவது வந்து ஜெபித்துப் போயிருக்கலாமல்லவா ? இந்தப் பாரு, இனிமேல் என்னவென்றாலும் உடனே வந்து விடு. இரட்சிக்கப்பட்ட அன்று இருந்த குதூகலம் என்றுமேயிருக்கும் என்று நினைக்காதே. உன் உணர்ச்சிகள் மாறும். ஆனால் உன் இரட்சிப்பு மாறாது. அது உண்மை. வசனத்தை விசுவாசித்து உறுதியாய்ப் பற்றிக்கொள்."

"நான் இரட்சிக்கப்பட்டேனா என்று எனக்கே சந்தேகமாயிருக்கிறது. எனக்கு ஒன்றுமே வித்தியாசம் தெரியவில்லை."

"இதுதான் இரட்சிக்கப்பட்டவருக்கு வரும் முதல் சந்தேகம். இதிலேயே அநேகர் விழுந்துவிடுகின்றனர். நீ உணர்ச்சிகளை நம்பி நடக்கிறாய்; உண்மையை நம்பி நட... வேத வசனம் உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று சொல்லுகிறது. அதை அப்படியே விசுவாசி. நேற்றைய உன் பிறந்த நாளன்று இருந்தது போலவா இன்றிருக்கிறாய் ? அந்தக் குஷி மாறி விட்டதல்லவா ? அதனால் உன் பிறந்த நாள் கனவாகிவிடுமா ? பிறந்தநாள் எனும் உண்மை மாறாது; ஆனால் சந்தோஷம் எனும் உணர்ச்சி மாறுகிறது. அதே போல்தான் நீ மறுபடியும் பிறந்தது உண்மை (Fact); திருவசனத்தில் நீ கொண்டுள்ள உறுதி, விசுவாசம் (Faith); அன்று நீ அடைந்த சந்தோஷம் உன் உணர்வு (Feeling). Fact first, Faith next, Feelings last என்ற வரிசையை ஒருபோதும் மாற்றாதே. பழைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன; மறக்கப்பட்டுவிட்டன. அவைகள் இனி உன்னைக் குற்றப்படுத்த அவசியமில்லை. நமது இரட்சிப்பு நமது உணர்ச்சிகளிலல்ல, சிலுவையில் செய்து முடிக்கப்பட்ட கிறிஸ்துவின் புண்ணியச் செயலினாலேயே நிற்கிறது.

"பிசாசு, இப்போது நீ கடவுளுடைய பிள்ளையாகிவிட்டதால் உன் மேல் கோபமாயிருப்பான். உன்னை எப்படியாகிலும் வீழ்த்திட நினைப்பான். உன் உணர்ச்சியைக் காட்டி நீ இரட்சிக்கப்படவில்லை என்று சொல்லி உன்னை

ஏமாற்றி சோர்ந்துபோகப் பண்ணுவான். அதுமட்டுமல்ல, நீ ஏதோவொரு பாவத்தில் விழுந்துவிட்டால் உடனே, பார் பார் நீ இரட்சிக்கப்படவேயில்லை என்பான். அவன் பொய்யனும் பொய்க்குத் தந்தையுமாயிருக்கிறான். சகோதரர்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் என்று வேதம் அவனைக் குறித்துச் சொல்லுகிறது.''

''அக்கா, என் மனதை அப்படியே சொல்லிவிட்டீர்களே. நான் இங்கு வரப் பயந்ததற்கும் அதுவே காரணம். பழையபடி என் சிநேகிதிகளோடு சேர்ந்து ஒருநாள் பேசினேன். அதற்குப் பின்பே எனக்கு மனது சரியில்லை. என் அனு பவத்தைக் குறித்து சந்தேகம். இந்த வாழ்க்கை என்னால் முடியாது என்ற எண்ணம் வேறு. பெற்றோரும் நான் விநோதமாக நடந்து கொள்ளுகிறேன் என்று எண்ணுகின்றனர். ஆகவே நேற்று சிநேகிதிகள் கட்டாயப்படுத்தவே, நாளை சினிமாவிற்குச் செல்ல சரின்னு சொல்லிவிட்டேன். மனச்சாட்சி என்னவோ உறுத்தத்தான் செய்கிறது.''

''நல்ல வேளை இன்று வந்தாய். போய் புரோகிராமை உடனே கான்சல் பண்ணு. உலக சிநேகம் கடவுளுக்கு விரோதமான பகை என்று வேதம் சொல்லுகிறது. மனச்சாட்சி உறுத்துகிறது என்று சொன்னாயே, கூர்மையான அந்த மனச்சாட்சிதான் இரட்சிக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொள்ளும் பரிசு. இதற்குமுன் நீ சந்தோஷமாக அனுபவித்த காரியங்களை இனி உன் மனச் சாட்சி குற்றப்படுத்தும். இதுவே இரட்சிக்கப்பட்டோருக்கும் இரட்சிக்கப்படாதோ ருக்குமுள்ள பெரும் வேறுபாடு. இரட்சிக்கப்படாதவன் பாவத்தில் மகிழு கிறான்; இரட்சிக்கப்பட்டவன் பாவத்தினால் துக்கமுறுகிறான். அவன் பாவத்தில் நிலைக்கமாட்டான். ஆட்டுக்குட்டியைப் பார். அது சேற்றில் விழுந்தால் எழுந்து வெளியே ஓடும். பன்றியோ சேற்றிலே புரளும். நல்ல கிறிஸ்தவளாய் வாழ வேண்டுமென்கிற ஆழமான வாஞ்சை இரட்சிப்பின் அடையாளமாகும்.''

''ஏங்க்கா, இரட்சிக்கப்பட்ட பின்பும் பாவம் செய்கிறோம்? அப்படியானால் எதற்கு இரட்சிப்பு?''

''இரட்சிக்கப்பட்டவுடன் நாம் உடனே தேவ தூதர்களாகிவிடுவதில்லை, மனிதராகத்தான் இருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. கடவுள் சர்வாதிகாரியல்ல. நமது சுயசித்தத்தை அபகரித்துக் கொள்பவருமல்ல. அவர் மெல்லிய குரலோடு இதயத்தில் நம்முடன் பேசுவார். பாவத்தைக் கண்டிப்பார். திருவசனம் மூலமாகவும் தமது பிள்ளைகள் மூலமாகவும் தமது சித்தத்தை வெளிப்படுத்துவார். கீழ்ப்படிவதோ கீழ்ப்படியாமல் போவதோ நமது கையில் தான் இருக்கிறது. இரட்சிக்கப்படாதவர்களுக்குக் கீழ்ப்படிதலின் ஆவியே கிடையாது.''



''புரியுதுக்கா. இப்போ என்ன செய்ய?''

''பாவத்தில் தவறி விழுந்துவிட்டாயானால் உடனே கடவுளிடம் மன்னிப்புக்கேள். அறிக்கையிட இரவு வரை காத்திராதே. Keep short accounts with God. இதுவே வளர வழி. ஒரு செடியைத் தினந்தோறும் பார். அதில் வளர்ச்சி தெரியாது. ஆனால் ஒரு வருடம் சென்று பார்த்தால் அதில் வளர்ச்சியைக் காணலாம். ஆனால் அதின் வளர்ச்சி அனுதின வளர்ச்சிதானே? அதுபோலத்தான் கிறிஸ்தவ வாழ்க்கையும். ஒருவேளை நீ வளருவதாகத் தெரியாவிடினும் வேத வாசிப்பிலும் ஜெபத்திலும் வாழ்க்கையிலும் கவன மாயிருப்பாயானால் நீ அனுதினமும் வளருவது நிச்சயம்.''

''எங்கள் பள்ளியில் ஒரு டீச்சர் இரட்சிக்கப்பட்டவர்கள். சில வேளை அவர்களது நடத்தையைப் பார்த்தால் இரட்சிக்கப்பட்டு என்ன என்றாகி விடுகிறது.''

''மனிதன் தவறுவது இயல்பே. இரட்சிக்கப்பட்டவர்களின் தவறுகள் உன் சாட்சியைக் காத்துக்கொள்ள ஊக்குவிக்கவேண்டுமேயொழிய உன்னைக் கரைந்துபோகப்பண்ணக் கூடாது. நமது முன்மாதிரியாகிய கிறிஸ்துவின்மேல் உன் கண்ணை வைத்து முன்னேறிச்செல்.''

''அக்கா, ஜெபிப்போமா?''

ஜெபிப்பதைவிட அதிகமாக ஸ்தோத்திரமே செய்தாள்.

''எப்படிக்கா இந்தப் பிள்ளைகளிடம் நான் சினிமாவிற்கு வரவில்லை என்று சொல்வது? கேலி செய்வார்களே.''

''இதற்கெல்லாம் பயந்தால் முடியுமா மாலா? நீ எதிர்பார்த்த மாறுதல் உன்னில் காணப்படாததற்கு ஒரு காரணம் உன் தோழிகளே. பழையவைகள் ஒழிந்தன; எல்லாம் புதிதாயின என்றால் உன் சிநேகிதிகளும் மாறவேண்டும். உன்னைப் போன்ற வாஞ்சையுடைய நல்ல பிள்ளைகளிடம் நட்புகொள். அவர்களுடன் நேரம் செலவிடு. அப்பொழுது பல வீண் சோதனைகளுக்குத் தப்பிவிடுவாய்.''

''ஆமாங்க்கா, இதுவரை வராத சோதனையெல்லாம் இப்போ வருவது போலிருக்கிறது.''

''வேட்டைக்காரன் குருவிகளை அடித்துவிட்டு முதலாவது, அடிபட்டு ஓடுபவைகளைத்தானே பிடிப்பான்? செத்தது என்றுமே அவனுடையதுதான்.

அதுபோலத்தான் பிசாசும் இப்போது உன்மேலேயே கண்ணாயிருப்பான். ஆனால் இயேசு: திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்று நம்மை தைரியப்படுத்துகிறார். பாவம் உன்னை மேற்கொள்ள மாட்டாது என்று வேதம் சொல்லுகிறது. நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை; உன்னைக் கைவிடுவதுமில்லை என்பது கடவுளின் வாக்குத்தத்தம். அப்படி என்னதான் சோதனை வந்துவிடப்போகிறது ? மனிதருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை நமக்கு நேரிடவில்லை. கடவுள் உண்மையுள்ளவராயிருக்கிறார்; நமது சக்திக்கு மேலாக நாம் சோதிக்கப் படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் என்று வசனம் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறபடியால் நாம் தைரியமடையலாம்.''


"அக்கா, எனக்கு மனதே இலகுவாகிவிட்டது. ஏதோ பெரிய பாரத்தை இறக்கியது போலிருக்கிறது.''

மாலா செல்வதை மகிழ்ச்சியுடன் பார்த்தேன். இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் நினைவிற்கு வந்தன—

"உங்கள் கனி நிலைத்திருக்கும்படி நான் உங்களை ஏற்படுத்தினேன்.''



# 5. உள்ளத்தைக் கிள்ளாதே!



கிறிஸ்துமஸ் புத்தாடை எடுக்க என்னுடன் செல்லுவதற்கு பெற்றோர் அனுமதித்தது மாலாவுக்கு ஒரே குஷி. குறித்த நேரத்தில் அவள் வீட்டை அடைந்தேன். எங்கிருந்தோ கேலி, கிண்டல், சிரிப்பொலி என் காதை எட்டின. சுவற்றோரமாய் நின்று நான் வந்ததை அறியாமல் அடுத்த வீட்டுப் பெண்ணுடன் வம்பளந்துகொண்டிருந்தாள்.

கருப்புப் பூதம் போன்ற அவர்கள் நாய் பாய்ந்து வர, நான், "மாலா, ஏய் மாலா'' என அலறினேன்.

மின்னலாய்ப் பறந்து என்னருகில் வந்தாள். அம்மாவிற்கு வழி யனுப்பிவிட்டு ஷாப்பிங் காம்ளெக்ஸை நோக்கி நடைபோட்டோம். கால்கடுக்க கடைகளில் ஏறி இறங்கியதுதான் மிச்சம். பொறுமையிழக்கத் துவங்கினேன்.

"அக்கா, அந்த ட்ரஸ் அட்டகாசமா இருக்குல, பார்க்கலாமா ?'' கையைப் பிடித்து என்னை இழுக்க, நான் அசையாமல் நின்றதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள்.

"என்னக்கா பிடிக்கலையா ?'' முகத்தைச் சுளித்தாள்.

"பிடிக்கலை'' என்றேன் நேரடியாக. "இவ்வளவு இறுக்கமாவா போடறது, சே, அதுவும் முட்டிக்கு மேலிருக்கு. உள்ளத்தைக் கிள்ளக்கூடாது மாலா.''

“யார் உள்ளத்தைக் கிள்ளிவிட்டேன் இப்போ ?” அவள் மூக்கு சிவந்தது.

இந்தச் சந்தப்பத்தை நழுவவிட்டால் இனியொரு தருணம் கிட்டாது என, “சரி, சரி, வா; முதலில் கிறிஸ்துமஸ் வியாபாரத்தை முடிக்கலாம். திரும்பும் வழியில் பேசலாம்” என சட்டென்று பதிலுரைத்தேன்.

ஒரு வழியாய்த் தேடிப் பிடித்து ஒரு டிரஸ்சை அணைத்துக்கொண்டு வந்தாள் மாலா. பாலத்திற்கடியில் நதி பாடல் பாடி ஓடிக்கொண்டிருந்தது. கிறிஸ்துமஸ் சுடிதாரைக் குறித்துப் பேசிக்கொண்டே வந்தோம். எனக்கு சிரமம் வைக்காமல் அவளே பேச்சைத் துவக்கினாள்.

“டிரஸ் பத்தி என்ன சொன்னீங்க ? கட்டையா போடக்கூடாது, அப்படித்தானே ?”

“உடலை அதிகமாகக் காட்டி ஆண்களின் இச்சையைத் தூண்டி விடக்கூடாது மாலா. மானக்குறைவான நவநாகரீக உடையலங்காரங்களைத் தவிர்க்க வேண்டும்.”

மாலா கதவைத் திறக்க பேசிக் கொண்டே உள்ளே நுழைந்தோம்.

“ஆறு முழப் புடவைக் கட்டவா ?”

அவள் சத்தத்தில் கலந்திருந்தது கோபமா, கிண்டலா எனத் தெரியவில்லை. “துள்ளும் இளந் தளிர்களுக்குப் புடவை கால்கட்டுதான். ஆனால் சுடிதாரில் தேவதையாய் காட்சியளிக்கிறாயே. ஓட ஆட வசதி; பெண்மைக்கும் களங்கமில்லை. சரி, பைபிளை எடுத்துக்கொண்டு வா.”

முகஸ்துதியில் மயங்கிய அவள், பின்னாலே திரும்பி என்னைப் பார்த்துக் கண்ணடித்துக்கொண்டே, “நான் அமெரிக்கா சென்றால் என்ன செய்வது ?” என்ற கேள்வியை விசிறி விட்டு உள்ளே சென்றாள்.

Goodnews வேதாகமத்துடன் என் அருகில் அமர்ந்தாள்.

“ஒன்று தீமோத்தேயு இரண்டாம் அத்தியாயம் ஒன்பதாம் வசனம் பார்... அடப்பாவி, எங்கே தேடுகிறாய் ?... திருப்பு; திருப்பு.. ம்.. இன்னும்... புதிய ஏற்பாட்டுக்கு வா... சுவிசேஷங்களையும் தாண்டி... கடைசியில்... அப்பாடா. என்னடியம்மா இது. இன்னும் வேதப்புழக்கம் அவசியம். தினமும் நான்கு அல்லது ஐந்து அத்தியாயங்கள் வாசித்து ஓராண்டுக்குள் வேதத்தைப் படித்து முடிக்க முயற்சி செய்.

“இப்போது சங்கீதம் படிக்கிறேன்.”

“நல்லது வாசி.”

“பெண்கள் நாணத்தோடும் கண்ணியத்தோடும் தங்களை அலங்கரித்து தகுதியான பண்பான உடையணிய வேண்டும்.”



மலைத்து நின்றாள் மாலா.

“ஓகோாா, பைபிளிலா உடை ஒழுங்கு ? காலேஜ் பிராஸ்பெக்டஸ்சில் போடவேண்டியது.”

“மாலா, உனக்கு ஒருவேளை தெரியாமலிருக்கலாம். ஆனால் உள்ளத்தைக் கிள்ளும் உடை மின்சாரம் போல் கொல்ல வல்லது.”

மாலா கொட்டாவி விட்டு கண்ணைக் கசக்கிக் கொண்டாள்.

“சர்தான், உங்கள் நாணமான உடையளவுகள் எந்த அத்தியாயத்தில் எந்த வசனத்தில் இருக்கிறது என்று சொல்லுங்கள். டெய்லரிடம் சொல்லி சுடியைத் தைக்கக் கொடுக்கிறேன்.”

“பெண்கள் தங்கள் வயதிற்கும் தாங்கள் வாழும் இடத்திற்கும் ஏற்றபடி உடுக்க வேண்டும். ஒருவன் உன்னைத் திரும்பிப் பார்க்கிறது போல உன் உடை அரைகுறையா இருக்குமானால் அது உனக்கே குழி தோண்டு வதாகும்.

“சில சமயம் ரொம்ப போர்அடிக்கிறீங்க அக்கா. என் கல்யாணத்தன்று என்னை அம்மாம்மி மாதிரி உடுத்தி விடாதீர்கள்.”

‘காளை வயது, கட்டான சயது, களங்கமில்லா மனசு’ என்ற பாடல் நினைவிற்கு வந்தது.

“அழகாய், அடக்கமாய், அம்சமாய், அசத்தலாய் உடுத்து. எடுப்பாய் எளிமையாய் இருக்க வேண்டும். பெண்ணைப்போல் காட்சியளிக்க வேண்டும்.”

மாலா ரம்பையைப்போல ஒரு புன்னகையை உதிர்த்தாள்.


ஓடிவந்து என் காதில் கைகளைக் கூப்பி, “அக்கா, ஜீன்ஸ் போடலாமா ?” எனக் கிசுகிசுத்தாள்.

“ம்....ம்...ம்... யாரையும் குற்றம் சொல்ல விருப்பமில்லை. ஆனால் பெண்கள் பெண்களாக இருக்க வேண்டும். அதுதான் அழகு என்பேன்.”

ஒரு ஜோக்கடித்து நிலமையை இலகுவாக்கத் தீர்மானித்தேன்.

“மாலா, சமீபத்தில் ஒரு கார்டுன் பார்த்தேன். ஓடோடி வந்து கதவைத் திறந்தான் சிறுவனொறுவன். வெளியே நின்ற உருவத்தைப் பார்த்து துடுக்காய்க் கேட்டான்: நீ என் அக்காவின் boy friendஆ அல்லது அண்ணனின் girl friend ஆ ?” மாலா சுருண்டு விழுந்து சிரித்தாள். எனக்கும் மனது இலகுவானது.

# 6 காற்றினிலே வந்த காதல்!



ஆத்ம, சரீர சுகமளிக்கும் கூட்டம். ஓரத்தில் உட்கார்ந்திருந்தேன், யாரோ தோளைத் தொட்டது போலிருந்தது. மாலா பின்னாக நின்றுகொண்டிருந் தாள். நான் நகர்ந்து கொண்டு இடம் கொடுத்ததும் அமர்ந்து கொண்டாள்.

''ஏன் மாலா வீட்டிற்கே வர வில்லை ?''

''பரீட்சை நெருங்கி விட்டது. என்னதான் செய்வதோ.''

''ஏன் இத்தனை சலிப்பு ? நீதான் நன்றாகப் படிப்பாயே.''

''அதில்லை...''

''என்ன ?''

மீட்டிங் ஆரம்பித்துவிட்டது.

''வீட்டிற்கு வருகிறாயா ?''

''ம்''

காலிங் பெல் கிணிகிணித்தது! மாலாவின் முகம் களைத்திருந்தது. அவளாகப் பேசட்டும் என்று பொறுத்திருந்தேன்.

''படிக்கவே முடியவில்லை அக்கா. வர வர மார்க்குகள் குறைந்துவிட்டன. Believerஆம் believer என்று டீச்சர் எல்லார் முன்பாகவும் திட்டிவிட்டார்கள். பள்ளிக்குப் போகவே விருப்பமில்லை.''

''ஏன் மாலா திடீரென்று ?''

''அக்கா.... ஒண்ணுமில்லைக்கா.''



''என்னத்தை முழுங்கினாய் ? படிக்கும் வேளையில் சொப்பனங் காண்கிறாயா ?''

''அதைத் தவிர்க்கவே முடியவில்லையே.''

''யாரை மனதில் வைத்திருக்கிறாய் ?''

''சொல்லமாட்டேன்.''

''சொல்லாவிட்டால் போ.''

''அக்கா எப்படியோ சிக்கிக்கொண்டேன். மீள வழி தெரியாமல் முழிக்கிறேன். நான் இரட்சிக்கப்பட்டவுடனேயே விட்டுவிட முயன்றேன். ஆனால் அவர் பிடிவாதமாய் இருக்கிறார். உன்னை மறக்கவே முடியாது என்கிறார். நீ என்னைக் கைவிட்டால் நான் தற்கொலை செய்து கொள்வேன் என்கிறார். என் சிநேகிதிகள் எல்லாருக்கும் தெரியும். ஒரு சில கடிதங்களும் எழுதியிருக்கிறேன். இதையெல்லாம் நினைக்கும்போது எப்படிப் பின் வாங்குவது ? எப்படி ஒருவரை மனம் நோகச் செய்வது ? எப்படி என் வார்த்தையில் தவறுவது ? என் சிநேகிதிகள் என்னைப்பற்றி என்ன நினைப் பார்கள் ? என்றெல்லாம் எண்ணிப் பயப்படுகிறேன். அவர் கெட்டவராக இருந்தாலும் பரவாயில்லை, மிகவும் நல்லவர். என்னால் அவரை மறக்கவே முடியவில்லை. காலையில் எழுந்தது முதல் இரவுவரை அவர் நினைவுதான். வேதத்தை எடுத்தாலோ ஜெபிக்க முழங்காற்படியிட்டாலோ நினைவுகள் அவரை நோக்கிப் பறந்துவிடுகின்றன. படிக்கவே முடியவில்லை.''

லேசான மழைத்தூறல். மின்சாரம் இல்லாதபடியால் மெழுகுவர்த்தி ஏற்றியிருந்தது. காற்றில் துடித்த ஜுவாலை மாலாவின் முகத்தில் வண்ண ஜாலம் காட்டிற்று. வெட்கமின்றி விம்மினாள். ஐயோ, அன்றே கண்டித்தே னில்லையே. அவளாகச் சொல்லாததால் அப்படி இருக்காது என்று நினைத்து விட்டேன். இப்படிச் சிக்கித் தவிப்பாளென்று நினைத்திருந்தால் அன்றே தடுத்திருப்பேனே.

''யாரிது மாலா ? அந்த மைனர் மீசைப் பையன், உன் அண்ணனின் சிநேகிதனா ?''

மடை திறந்த வெள்ளம்போல கொட்டினாள்.

''அண்ணனைப் பார்க்க அடிக்கடி வருவார். நானும் சிரித்துப் பழகினேன். பின்பு அவருடைய பார்வையில் ஒரு கனிவையும் காதலையும் கண்டேன்.

நானும் பதில்கொடுத்தேன். அப்போதுதான் உங்களைச் சந்தித்தேன். இரட்சிக்கப்பட்டேன். எப்படியும் இந்தச் சோதனையிலிருந்து விடுபட முயன்றேன். ஆனால் அவரது சைக்கிள் சத்தம் கேட்டவுடனே தானாக கால்கள் கதவைத் திறக்க ஓடும். ஒருநாள் தண்ணீர் கேட்டார். கொடுத்தேன். எங்கள் விரல்கள் சந்தித்தன. அன்றிலிருந்தே பழக ஆரம்பித்தோம்.''

''இதெல்லாம் எவ்வளவு நாளாக ?''

''ஆறு மாதங்களாக.''

''தனியாக அவனுடன் நேரம் செலவிட்டிருக்கிறாயா ?''

''ஊஹூம்.''

''என்ன எழுதினாய் கடிதத்தில் ?''

''சும்மா.''

குனிந்துகொண்டு நகத்தைக் கடித்தாள்.

''ஏயப்பா! ஏதோ கப்பலே கவிழ்ந்து விட்டது போல பேசுறாயே மாலா. இது உனக்கே விநோத அனுபவம் என்று நினைத்துக் கலங்காதே. எல்லா வாலிபப் பிள்ளைகளுக்கும் இந்தச் சோதனை உண்டு. எதிர்த் துருவங்கள் ஒன்றை ஒன்று ஈர்ப்பது இயற்கைதானே.''

குனிந்த தலை நிமிரவில்லை. முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். வலது கை பெருவிரல் நகம் தரையில் அர்த்தமற்ற கோடுகளைக் கிழித்துக் கொண்டிருந்தது.

''ஆணும் பெண்ணும் ஒருவரிலொருவர் கவர்ச்சி அடையும் வண்ணமாகவே கடவுள் நம்மைப் படைத்திருக்கிறார். ஆனால் அதை நாம் சரியானவிதத்தில் பயன்படுத்தாவிடில் நமது வாழ்வையே நாசமாக்கிக் கொள்வோம். உனக்கு இப்போ வயதென்ன ?''

இமைகள் மட்டும் மேலெழுந்தன.

''பதினாறு.''

''மாலா, நீ இன்னும் உலகத்தை அறியாதவள். வாலிப வயதின் உணர்ச்சிகள் பலமானவை. ஒரு வாலிபனைக் கண்டவுடன் உன்னில் தூங்கிக் கிடக்கும் உணர்ச்சிகள் விழித்தெழும். அதை நேசம் என்றும் காதலென்றும் நினைத்துக்கொண்டு உளறுகிறாய். திடீர் காதலுக்குக் கண்ணில்லை. நேசத்திற்கோ நான்கு கண்கள் உண்டு. அது பார்க்கும், கவனிக்கும், பொறுத்திருந்து கூர்ந்து நோக்கும், விசாரிக்கும். சரி, அதிருக்கட்டும். 16 வயதில் காதலிப்பது கண்மூடித்தனம். உனக்கு முன்பாக ஒரு வாழ்க்கையே இருக்கிறது. இப்போதே குட்டையில் விழுந்துவிட்டால் எப்படி ? நல்ல இரட்சிக்கப்பட்ட கணவனைத் தெரிந்தெடுக்கும் வயதோ அறிவோ



உனக்கில்லை. இருபது, இருபத்திரண்டு ஆகட்டும். அதற்குள் உன் படிப்பை முடித்துவிடுவாய். அதற்குபின் ஜெபத்துடன் காத்திரு. கடவுள் உன்னை வழி நடத்துவார். இப்போது உன் படிப்புதான் உனக்கு முக்கியம். காற்றில் வந்த காதல் காற்றோடு போகட்டும்.''

மூக்கை உறிந்து கொண்டாள்.

''படிப்பில் கோட்டை விட்டுவிடாதே. உன் சாட்சியை இழந்துவிடாதே. உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ .... கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்று பவுல் எழுதுகிறார். பலருக்குச் சாட்சியாகவும் முன்மாதிரியாகவும் நடந்துகொள்ளவேண்டிய நீ சிறு காரியங்களில் கவலையீனமாகி விடாதே.

''பாபுவை மறந்து விடு. நீ நினைப்பதுபோல் ஒன்றும் நடந்துவிடாது. அவனாவது தற்கொலை செய்து கொள்கிறதாவது. தைரியமாகச் சோதனையை விட்டு விலகு. பாலியத்திற்குரிய இச்சைகளுக்கு விலகியோடு. இதை மட்டும் நினைவில் வைத்துக் கொள். எல்லாச் சோதனைக்கும் நாம் எதிர்த்து நிற்க வேண்டும்; பாலியத்திற்குரிய இச்சைக்கோ விலகி ஓடவேண்டும்.''



மாலாவின் வலது கையை எடுத்து நடுவிரலையும் சுட்டு விரலையும் விரித்து "V". செய்து காட்டினேன்.

''மறந்து விடாதே. 2 தீமோத்தேயு, 2 ஆம் அத்தியாயம், 22 ஆம் வசனம்—விக்டரிக்கு அடையாளமான "V." அதுவே உன் வெற்றி வாழ்க்கைக்கு வழி. இனி பாபுவைச் சந்திப்பதை எப்படியும் நிறுத்திவிடு. தடுமாற மாட்டாய். சோதனைக்கு வழிநடத்தும் இடங்களையும் நபர்களையும் தவிர்த்துவிடு. எந்த வாலிபனோடும் எவ்வித கடிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளாதே, தப்பித்துக்கொள்வாய்.''

ஆயிரம் எண்ணங்கள் அலைமோதும் உள்ளம் அரைமணி நேரத்தில் அமர்ந்து விடுமா ?

# 7 அடித்தாளே பல்டி!

*My dear sister,*



சுகமாயிருப்பீர்களென்று நம்புகிறேன். தயவுசெய்து வந்து மாலாவுடன் பேசுங்கள். பரீட்சையில் தோல்வியுற்றதால் அப்பா நன்றாகத் திட்டிவிட்டார். அதிலிருந்து ரூமை விட்டு வெளியே வருவதில்லை. அழுதுகொண்டே கிடக்கிறாள். ஒருவேளை நீங்கள் வந்தால் சரியா வாளென்று நினைக்கிறேன். நன்றி.

*Mrs. Robin*

மாலா எப்போதும் என் பேச்சைத் தட்டினதில்லை. ஆகவே நான் அவளை அதிகமாய் நம்பிவிட்டேன். என்ன ஆயிற்றோ பாவம்! தாயார் சுட்டிக்காட்டிய படிகளில் ஏறிக் கதவை மெதுவாகத் திறந்தேன். தலையணையை அணைத்துக் கொண்டு படுத்துக் கிடந்தாள். மின்சாரம் பாய்ந்ததுபோல திடும் என்று எழுந்து உட்கார்ந்தாள்.

''என்ன மாலா இது ? என்ன அலங்கோலம் இது ? எழுந்திரு.''

''ஏனக்கா கடவுள் என்னை இப்படிச் சோதிக்கிறார் ? யார் முகத்தில் விழிப்பேன் நான் ? விஷம் குடித்து சாகப்போகிறேன்.''

''ஆகா, செத்துப்போவது அவ்வளவு சுலபமா ? அதை மட்டும் நினைக்காதே. நீயே உன்னை நரகத்தில் தள்ள தற்கொலைதான் வழி. அவ்வுலகம் போய்விட்டால் உனக்கு நம்பிக்கையே இல்லை. மறுபடி இவ்வுலகம் வரவும் முடியாது. எச்சரிக்கை ! வாழ்க்கையின் கைப்பிடி நம்பிக்கை. அது உடைந்து விட்டால் வாழ்க்கையைப் பயன்படுத்த முடியாமல் போய்விடும். எனவே நம்பிக்கையை மட்டும் இழந்து விடாதே.''

ஆறாய் ஓடியது கண்ணீர்.



''எல்லாப் பழியையும் கடவுள்மேல் போடாதே. ஏன் fail ஆனாய் ? படிக்கவில்லை, அதானே. கடவுள் அவரவரது முயற்சியைத்தான் ஆசீர் வதிப்பேன் என்று சொல்லியிருக்கிறார். ''அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்'' என்றுதான் திருவசனம் சொல்கிறது. செய்யாதது எப்படி வாய்க்கும் ? நீதியுள்ள கடவுள் உன் முயற்சிக்கேற்ற பலனைத்தானே தரமுடியும் ? யுத்தத்திற்காக குதிரை ஆயத்தம்பண்ணப்படாவிடில் வெற்றி எப்படிக் கடவுளால் வரும் ? உன் தவற்றை ஒத்துக்கொள். கடவுள் உனக்கு உதவி செய்வார். பாபுவின் தொடர்பைத் துண்டித்து விட்டாயா ?''

''என்னால் முடியவில்லை அக்கா.''

மாலாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது. பெற்றோராவது சற்றுக் கவனமாயிருந்திருக்கக் கூடாதா ?

''சரி எந்திரி, இது என்ன இப்படி பன்னிமாதிரி குளிக்காமல் கொள்ளாமல் ? உன் ரூம் ஏன் இப்படிக் குப்பைமேடு போலிருக்கிறது ? நடந்ததை நினைத்துப் புண்ணியமில்லை; பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடிச் செல்லவேண்டும் என்பதுதான் அறிவுரை. இனி ஆகவேண்டியதைக் கவனி. கிறிஸ்தவள் பின்னே திரும்பிப் பார்ப்பதில்லை; என்ன வந்தாலும் சரி என்று முன்செல்கிறாள். அவளே இலக்கை அடைவாள்.

''முதலாவது அறையைச் சுத்தம் பண்ணு. சோம்பலுக்கு இடம் கொடுப்பதினாலேயே பகற்கனவுகளுக்குப் பலியாகிறாய். அதைத் தவிர்க்க ஒரே வழி சிந்தனையைச் சோம்பற்கூடமாக்காமல் ஏதாவதொன்றைச் செய்து கொண்டேயிருப்பதுதான். களைந்த துணிகளை இப்படிக் குவித்து வைக்காதே, உடனுக்குடன் மடித்துவை. ப்பா! ப்பா! கொசுக்கள் கூட்டம்! இரட்சிக்கப்பட்டால் ஒழுங்கு கூடவேண்டுமே ஒழிய, குறையக்கூடாது. மேசையைச் சுத்தம் செய்து, table cloth விரித்துப் புத்தகங்களை அடுக்கி வை. படுக்கையைத் தட்டி விரி. தலையணை உரையைப் பார். அய்யய்ய, எண்ணெய் இறங்கி! துவைத்துப்போடு. ஒழுக்கம் விழுப்பம் தரலான்; ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.''

நான் உதவிசெய்ய மாலா பம்பரமாய்ச் சுற்றினாள். சில விநாடிகளில் அவளது அறை துலங்கிற்று.

''பார் மாலா, எவ்வளவு நன்றாக இருக்கிறது. கடவுள் நடமாடும் இடத் தைச் சுத்தமாக வைக்கவேண்டாமா ? ''உன் தேவனாகிய கர்த்தர் உன் பாளையத்திற்குள்ளே உலாவிக்கொண்டிருக்கிறார்; ஆகையால், அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தைக் கண்டு, உன்னைவிட்டுப் போகாத

படிக்கு உன் பாளையம் சுத்தமாயிருக்கக் கடவது,'' என்று கடவுள் சொல்லு கிறார். அப்படியானால் கடவுள் நமது சுத்தத்தை எவ்வளவு கவனிக்கிறார் என்று பார்... காலையில் குளித்தாயா ?''

''இப்பத்தான் போக வேண்டுமென்றிருந்தேன். அதற்குள் நீங்கள் வந்துவிட்டீர்கள்.''

''சும்மா டுப் அடிக்காதே. ஒரு வாலிபப் பெண் காலை 8 மணிக்கு இப்படியா புளிக்கொண்டையுடன் காட்சியளிப்பது ? வீட்டிற்கு யாராவது வந்துவிட்டால் என்ன நினைப்பார்கள் ? எத்தனை மணிக்கு எழுகிறாய் ?''

''ஆறு''

''ஊஹூம். அதெல்லாம் போதவே போதாது. 'சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய் ? எப்பொழுது உன் தூக்கத்தை விட்டு எழுந்திருப்பாய் ? இன்னுங் கொஞ்சம் தூங்கட்டும், இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும், இன்னும் கொஞ்சம் கைமுடக்கிக்கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ ? உன் தரித்திரம் வழிப்போக்கனைப் போலவும், உன் வறுமை ஆயுதமணிந்தவனைப் போலவும் வரும்.' அப்படித்தான் ஆகிவிட்டது உன் கதையும். காலையில் 5 மணிக்குத் துயிலெழப் பழகு. பல்லைத் துலக்கி, முகத்தைக் கழுவி, காலைப் பாடல் ஒன்று பாடு. தூக்கம் ஓடிவிடும். இப்பொழுது வேதத்தை எடுத்து வாசித்து ஜெபி. ஒரு மணி நேரம் தனித் தியானத்தில் செலவிடு. பின்பு ஏன் உனக்கு வாழ்க்கையில் தோல்வி, ஏமாற்றம் ? காலை எட்டு மணிக்கு உன் நிலையைப் பார்த்த பின்புதான் உன் தோல்விக்குக் காரணம் புரிந்தது. நீ ஃபெயில் ஆனதில் ஆச்சரியமொன்றுமில்லை. கடவுள் சோம்பேறிகளை ஒரு போதும் ஆசீர்வதிக்கிறவரல்ல.''

மாலா குளித்துத் தலைவாரி வந்தாள்.

''உட்காருடி மாலா. இதென்ன தலையெல்லாம் ஈரும் பேனுமாக ? சீத்தாக்கொட்டையை அரைத்துத் தலையில் போட்டு அரை மணி நேரம் கழித்துக் குளித்தால் பேன் போகும். மறுபடி ஒரு வாரம் கழித்துப்போட்டால் ஈறும் போகும்.

''வீட்டிலும் சில பொறுப்புகளை நீ ஏற்க வேண்டும். இக்காலத்தில் பெண்பிள்ளைகள் வீட்டுவேலை செய்வதைக் குறைவாக எண்ணுகின்றனர். ஆனால் பெண்ணிற்கு முதல் சாட்சி வீட்டிலே; முதல் ஊழியமும் வீட்டிலேதான். ஒரு பெண்ணின் வாழ்க்கையில் படிப்பைவிட வீடே முதலிடம் வகிக்கவேண்டும். வீட்டில் உள்ள ஒழுங்குதான் பள்ளியிலும், வெளியிலும், ஊழியத்திலும்



பிரதிபலிக்கும். கடவுள் சிறியதில் உண்மையாயிருக்கிறவனைப் பெரியதில் அதிகாரியாக்குவார். சமைக்கத் தெரியுமா ?''

''கொஞ்சம் தெரியும்.''

''என்ன தெரியும் ?''

''வந்து ... அப்பளம் பொரிப்பேன்.''

''ஆகா, வேற ?''

''ம்ம் ... முட்டை அவிப்பேன்.''

''அடி சக்கை. Ph.D. கொடுக்கவேண்டியதுதான்.''

''இந்த லீவில் படித்துக்கொள்ளுகிறேன்.''

''அதைச் செய். புத்தகப் புழுவாகிவிடாதே. சமையல் படி. உன் துணிகளை நீயே துவைத்துக்கொள். சில அறைகளையாவது பெருக்கு, தண்ணீர் இறை, தோட்டம் போடு, பாத்திரம் கழுவு, தையல் தை; புண்ணியமாக எதையாவது செய்.''

''எங்க வீட்ல இதெல்லாம் யாரும் செய்யமாட்டாங்க. வேலைக்காரிதான் செய்வா. நான் திடீரென்று செய்தால் எல்லோரும் சிரிப்பாங்க.''

''நாலு நாள் சிரிப்பாங்க, பிறகு சும்மாயிருப்பாங்க. மத்தியானம் படுத்துத் தூங்காதே.''

''அது கஷ்டம்க்கா.''

''கஷ்டம்தான். யார் இல்லையென்று சொன்னது. நாம் மற்றவர்களைப் போலல்லவே. பரம பந்தயத்தில் ஓடுகிறவர்களாயிற்றே. பந்தயத்தில் ஓடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் தன்னடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்குச் செய்கிறோம். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் உடலை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்'' எனப் பவுல் எழுதுகிறார்.

“மதியம் தூங்குவதினால் இரவில் நித்திரை வருவதில்லை. அதுவே சிந்தனையில் பாவத்தை வளர்க்கும். நீ படுத்த மாத்திரத்தில் தூங்கிவிடும் அளவிற்குக் களைத்துப்போக வேண்டும். அவ்வளவாய் உடலுக்கு வேலை கொடு. அது உனக்கு நல்ல உடற்பயிற்சி மட்டுமல்ல, பிற்கால வாழ்க்கைக்கும் மிகவும் பயன்படும். சாயங்காலம் நன்றாக விளையாடு. பாவம் செய்ய நேரமே இல்லாமற் போகும். நீயெல்லாம் எப்படித்தான் குடும்பம் நடத்தப் போறயோ அம்மா! சரி, பாபுவைக் குறித்து உனக்கு என்னதான் ஐடியா? இந்தக் கட்டிலிருந்து நீ விடுபட விரும்புகிறாயா இல்லையா?”

“விரும்பத்தான் செய்கிறேன். ஆனால் நான் விரும்பாததையே செய்கிறேன்.”

“பக்தன் பவுலின் பாடும் இதுதான். நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன் என்று சொன்னார். இதை நீ உத்தமமாய்க் கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபித்திருக் கிறாயா?”

“அப்படி நான் நினைத்துப் பார்க்கவில்லை.”

“சிறிதானாலும் பெரிதானாலும் எல்லாவற்றையும் ஜெபத்தில் ஏறெ டுக்கப் பழகு மாலா. ஜெபமே ஜெயம். வா, ஜெபம் பண்ணுவோம்.”

முகத்தில் அவிசுவாசமும் தயக்கமும் தாண்டவமாட மாலா முழங்காற் படியிட்டாள். எப்படியோ ஜெபித்து முடித்தாள்.

“அக்கா மணி 12 ஆகிவிட்டது; சாப்பிட்டுவிட்டுப் போங்க.”

பிரஷர் குக்கர் சத்தமும், கறிக்குழம்பு வாசனையும் மாடி ஏறி வந்தன.

“இல்லை மாலா, பாப்பா சாப்பிட வீட்டிற்கு வருவாள். நான் அதற்குள் போய்ச் சேரவேண்டும்.”




# 8 தலைக்கு வந்தது...

சனிக்கிழமை 3 மணி கூட்டத்திற்கு 2 மணிக்கே வந்துவிட்டாள். அவள் முகத்தில் தெளிவை எதிர்பார்த்த எனக்கு ஏமாற்றமே. மாலா ஒரு மர்மம்தான். என்னைக் கண்டவுடன் அவள் முகம் ஜிவ்வென்று சிவந்த வேகத்தைப் பார்த்து வேகமாய் மாடிக்கு அழைத்துச் சென்றேன்.

“என்ன மாலா, என்ன?”

அவளால் பேச முடியவில்லை. ஏங்கினாள்; வாய்விட்டுக் கதறினாள். என்ன ஆயிற்று? பாபு செத்துக்கித்துப் போய்விட்டானா?

பைபிளின் முதல் பக்கத்தைத் திறந்து கசங்கியதோர் துண்டுப் பேப்பரை எடுத்துக் கொடுத்தாள். அவசரமாய்ப் பிரித்தேன்.




அவ்வளவுதான். கையெழுத்தில்லை. பெருமூச்சு விட்டேன். அடேங்கப்பா, இவ்வளவுதானே. முகத்தைக் கையில் பதித்தவண்ணம் துண்டு துண்டாய்ச் சொன்னாள்.

பாபுவின் அப்பா புதிய வேலைக்காக டெல்லி போகிறாராம். பாபுவும் B.Sc. முடித்துவிட்டதால் குடும்பமாகப் போகிறார்கள். வீட்டிற்கு வந்திருக் கிறான் பையன். துண்டுக் கடிதத்தை வழக்கம்போல மேசையிலிருந்த புத்தகத்தின் முதல் பக்கத்தில் வைத்திருக்கிறான். ஏற்கனவே இடமாற்றத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு அதிர்ச்சியுற்றிருந்த மாலாவிற்கு ஓர் ஆறுதல். டெல்லி addressஆக இருக்கும். ஒன்றும் அறியாததுபோல புத்தகத்தை நாசுக்காக எடுத்துக்கொண்டு மாடிக்கு ஓடிக் காதல் கடிதத்தைப் பிரித்திருக்கிறாள். எதிர்பாராத அதிர்ச்சி! பித்துபிடித்தவள்போல விளக்கம் கேட்க நினைத்துத் திரும்பினபோது பாபு சைக்கிளில் வெளியே போவதை மாடி போர்ட்டிகோ விலிருந்து பார்த்திருக்கிறாள்.

அதற்குமேல் அவளால் ஒன்றும் முடியவில்லை. குலுங்கிக் குலுங்கி அழுதாள். ஏனோ எனக்குச் சிரிப்புதான் வந்தது. பரிதாபப்பட முடியவில்லை. Generation gap! வெளியே ஒன்றும் காட்டிக்கொள்ளாமல் ஆறுதல் படுத்தினேன்.

''வாலிபனுக்கு இதெல்லாம் ஒரு விளையாட்டு மாலா. விளையாட்டு பொம்மை அவன் பார்வையில் மயங்கிய பெண். விளையாட்டு முடிந்தவுடன் தூக்கி எறிந்துவிடுவான். நீ புத்திசாலி. பிழைத்துக்கொள்வாய் என்று எண்ணினேன். பலியாகிவிட்டாயே! சரி போ; இப்போது ஒன்றும் ஆகி விடவில்லை. எளிய பாடத்தைக் கடின முறையில் படித்துக்கொண்டாய். இனி ஒருபோதும் இத்தவற்றைச் செய்யமாட்டாய்.''

''மாட்டவே மாட்டேன் அக்கா. எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. உலகமே இப்படித்தான். நான் திருமணமே செய்யப் போவதில்லை.''


''Silly! ஒரேயடியாக முடிவு கட்டாதே. நாளையைக் குறித்து இன்று ஏன் கவலை? பாபு மட்டும் டெல்லிக்கு போகாமல் இங்கேயே இருந்திருந்தால் இன்னும் ஒரு வருடம் கழித்து இதே கடிதத்தைப் பெற்றிருப்பாய். அந்த ஒரு வருடத்திற்குள்ளே உன் வாழ்க்கை செம்மைப்படுத்த முடியாத அளவு சேதமடைந்திருக்கும். அதை நினைத்தே நீ கடவுளுக்கு எவ்வளவோ நன்றி செலுத்தவேண்டும். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்றென்று நினைத்துக்கொள்.

''இனியும் இப்படிப்பட்ட சோதனை வராதென்று நினைக்காதே. சோதனை வரும். ஆனால் சோதனையான முதல் பார்வையைக் கண்டுக்கொள். இரண்டாம் பார்வைக்கு இடம் வைக்காதே. வைத்தால் அது தொடர் கதைதான்.

''சிந்தனையைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள். ஒரு சிறிய புதிய ஏற்பாடு எப்போதும் கையில் இருக்கட்டும். பஸ் ஸ்டாண்டிலோ வேறெந்த இடத்திலோ சிறிது நேரம் சும்மாயிருந்தாலும் அதை எடுத்து வாசிக்க ஆரம்பித்துவிடு. கண்களையும் சிந்தனையையும் கட்டுப்படுத்த இதை ஒரு practical உதவியாக நான் கண்டிருக்கிறேன். 2 கொரிந்தியர் 10:5இல் எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிற போராயுதம் என்று சொல்லப் பட்டிருப்பது திருவசனம்தான். சரி, போய் முகத்தைக் கழுவிப் பவுடர் போட்டுக் கொண்டு வா. ஜெபத்திற்கு எல்லாரும் வர ஆரம்பித்துவிட்டார்கள்.''



# 9 மலர்ந்த மலர்



மாலாவில் பெரிய மாற்றம். இந்தப் புழுவா இவளை இப்படி அரித்துக் கொண்டிருந்தது என்று நினைத்தால் ஆச்சரியமாக இருந்தது. வாலிபப் பருவத்தில் காதல் குட்டையில் விழுவதின் விபரீதத்தைப் புதிய விதத்தில் அறியும்படிக் கடவுள் என் கண்களைத் திறந்தார். அன்றிலிருந்து வாலிபப் பெண்களுக்கு ஆலோசனையில் இதைச் சேர்க்க மறப்பதில்லை.

பனியில் நனைந்த புல்லைப்போல வளர ஆரம்பித்தாள். ஒழுங்கில் பழகினாள். அன்றாடம் வாசித்த வேதப் பகுதியில் கேள்விகளோடு வருவாள். ஒருநாள் ஒரு நோட்டுப் புத்தகத்தைக் காண்பித்தாள். அதில் அன்றாட தியானக் குறிப்புகளைக் குறித்துவைத்தி ருந்தாள். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. ஊக்கமாய் ஜெபித்தாள். ஒழுங்காக சனிக்கிழமை பெண்கள் ஜெபத்தில் கலந்து கொண்டாள். ஊழியக் குழுவில் இணைந்துகொண்டாள். வீட்டினருகே பிள்ளைகளைக் கூட்டி ஓர் ஓய்வுநாள் பள்ளி ஆரம்பித்துவிட்டாள். முகத்தில் புதுக்களை. புது ideas கொடுத்தாள். படிப்பில் கவனம் செலுத்தினாள்.

சிநேகிதிகளை ஒவ்வொருவரையாக மனம் மாற்ற ஆரம்பித்தாள். ஆலோசனைக்குக் கூட்டி வருவாள். புதிதாக வாலிபப் பெண்கள் சனிக்கிழமை கூட்டத்தில் கலந்துகொள்ள ஆரம்பித்தனர். அவளிடம் மறைந்துகிடந்த தாலந்துகள் மலர ஆரம்பித்தன. மாலா கூட இவ்வளவு creativeஆக இருப்பாள் என்று நான் நினைக்கவே இல்லை.

வீட்டில்தான் சிறு மோதல்.

''பெற்றோருக்கு எப்படித்தான் கீழ்ப்படிவதோ? இரட்சிக்கப்படுமுன்பாவது பரவாயில்லை. இப்போ எப்பப் பார்த்தாலும் சிடுசிடுவென்றிருக்கிறார்கள். நான் என்ன சிறு தவறு செய்துவிட்டாலும் இதுதானா இரட்சிப்பு என்கிறார்கள். நீ உன் தங்கையுடன் சண்டை போடுவதைப் பார்த்தால் எங்களுக்கு இந்த இரட்சிப்பே வேண்டாம் என்கிறார்கள். சினிமாவிற்குப்போவது பாவம், போகாதீர்கள் என்றாலும், நீ எங்களுக்கு உபதேசம்பண்ண வேண்டியதில்லை என்கிறார்கள்.''

“உண்மைதானே மாலா. நீ ஏன் தங்கையுடன் சண்டை போடுகிறாய் ?”

“அவளது நடத்தை ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை.”

“இந்த இடத்தில் உன் சாட்சி அதிக முக்கியம். வேதத்தை எடு. யோவானின் நிருபங்களுக்குத் திருப்பு. யோவான் சுவிசேஷமல்ல, நிருபம். கடைசியில், ம், 1 யோவான் 2:9; 3:15,18; 4:20,21. இந்த வசனங்களை உன் பெயரை வைத்து வாசிக்கிறேன். கவனி.

“ஒளியில் இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரியைப் பகைக்கிற மாலா இதுவரைக்கும் இருளிலே இருக்கிறாள். தன் சகோதரியைப் பகைத்தால் மாலா மனித கொலைபாதகியாயிருக்கிறாள். மனித கொலைபாதகி எவளோ அவளுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது. மாலா, வசனத்தினாலும் நாவினாலுமல்ல செயலினாலும் உண்மையினாலும் அன்புகூர வேண்டும். கடவுளிடத்தில் அன்புகூருகிறேனென்று நீ சொல்லியும் உன் சகோதரியைப் பகைத்தால் நீ பொய் சொல்லுகிறாய். நீ கண்ட சகோதரியினிடத்தில் அன்பு கூறாமலிருக்கும்போது நீ காணாத கடவுளிடத்தில் எப்படி அன்புகூருவாய் ? மாலா, தேவனிடத்தில் அன்புகூருகிற நீ உன் சகோதரியினிடத்தில் அன்பு கூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறாய்.”

“அக்கா, இப்படி வாசித்தா பயமா இருக்குக்கா. ஆனால் realisticஆக இருக்கிறது.”


“பைபிள் யாருக்கோ எழுதப்பட்டது என்று நினைத்துக்கொண்டு வாசிக்கும்போது கடவுள் எங்கோயிருப்பது போலிருக்கும். Our God is a personal God. வேதத்தை கடவுள் உனக்கே எழுதிய கடிதம் என்று நினைத்து வாசிக்கவேண்டும்.

“சரி, விஷயத்திற்கு வருவோம். ஆகவே உடன் பிறந்தோர் உன்னில் பெரிய மாற்றத்தைக் காணவேண்டும். நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன், நான் கடவுளுடைய பிள்ளை, நீங்களெல்லாம் இரட்சிக்கப்படவில்லை, பிசாசின் பிள்ளைகள் என்பதுபோல நீ நடந்து கொண்டிருக்கிறாய் என்று தெரிகிறது. சில பிள்ளைகள் இரட்சிக்கப்பட்டவுடனே வீட்டில் யாவரோடும் தாராளமாய்ப் பேசுவதில்லை. சந்தோஷமாயிருப்பதில்லை. அப்படியிருக்கக்கூடாது. குடும்பத் தினர் எல்லாரோடும் சுமுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கவேண்டும். மனவேற்றுமைகள் வந்தால் நீதான் தாழ்ந்துபோகவேண்டும். சண்டை வருமளவிற்கு நீ நடந்துகொள்ளவே கூடாது.



“உடன் பிறந்தோர், பெற்றோரின் மனந்திரும்பா நிலையைக் காணும்போது மனம் வேதனையடையத்தான் செய்யும். அதற்காக நீ பொறுமையிழந்து தொட்டதற்கெல்லாம் அவர்களைக் குற்றஞ்சாட்டிப் பிரசங்கம் பண்ணாதே. வெறுமனே உன் முயற்சியினாலே அவர்களை இரட்சிக்கப் பார்க்காதே. அவர்களுக்காக ஊக்கமாக ஜெபி. உன் நன்னடத்தை அவர்களுக்கு முன் மாதிரியாகவும் சாட்சியாகவும் விளங்கட்டும். கூடுமானபோதெல்லாம் உதவி செய். ஆவியானவர் அவர்கள் உள்ளத்தில் செயல்பட இடங்கொடு. உன் அன்பினாலே அவர்களை வென்றிடு. 1 கொரிந்தியர் 13ஐத் திரும்பத் திரும்பப் படித்து அன்பிலே தேறினவளாகு.”

## 10 *திருடன் ஜாக்கிரதை!*




“திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு வாழ்வு கொடுக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்” என்று இயேசு சொன்னார் (யோவான் 10:10).

எவ்வளவு உண்மை! இந்தத் திருடன் பயங்கர ரூபமாய் வருவதில்லை. அழகிய வாலிபனாகவோ, வீண் பொழுதுபோக்காகவோ, சோம்பலாகவோ வாழ்க்கையில் நுழைந்து வாலிப நாட்களின் பல உசித பொக்கிஷங்களைக் கொள்ளையாடுகிறான்.

அவன் “திருடுவதில்” ஒன்று நேரம். போனால் வராது, பொழுது விடிந்தால் கிடைக்காது என்பார்களே, அதுதான் நேரம். கன்னியர் பலர் பொன்னான நேரத்தைக் களவு கொடுத்துவிடுகின்றனர். இழந்த நேரம் அழுதாலும் வருமா?

அவன் “கொல்லுவதில்” ஒன்று நமது சாட்சி. இரட்சிக்கப்பட்டுவிட்டாலும் நமது சாட்சியைக் கெடுத்துவிட்டானானால் பிசாசு அதைத் தனக்கு வெற்றியாகவே கருதுகிறான். சாட்சியை இழந்தவள் கனியற்றவளாகிறாள். ஆத்தும ஆதாயப் பணியில் அவளுக்கு இடமில்லை. ஆகவே அவள் மூலமாய் தேவ சந்ததி பரவுவதில்லை. இதுவே பிசாசின் கொலைகளில் படுகொலை.

அவன் “அழிப்பதில்” ஒன்று கற்பு. வாலிப வயதின் இச்சைகளைப் பின்பற்றிக் கற்பைப் பறிகொடுத்த கன்னியர் ஏராளம். ஒரு வாலிபன் தன்னைத்



தொடுவதற்கு ஒரு பெண் அனுமதிக்கவே கூடாது. விளையாட்டு வினையாகும். அழிந்துபோன கற்பை அடைய முடியுமா? சிந்திய தண்ணீரைச் சேர்க்க முடியுமா?

‘திருடன் ஜாக்கிரதை’ என்று ஆத்துமாவில் ஒரு பலகை எப்போதும் தொங்கவேண்டும். விழிப்பாயிராவிடில் வீடு கொள்ளை போகும். அதற்கு மாறாக இயேசு நமக்கு வாழ்வளிக்கவும் அது நிறைவடையவும் வந்தார். அவரது கரத்தை இந்த மூன்று அம்சங்களில் பார்த்தால் புரியும்.

*முதலாவது,* நமது நேரத்தை அவர் கையில் கொடுத்து வேலைக்காரியின் கண்கள் இல்லத்தரசியின் கையை நோக்கியிருப்பதுபோல (சங் 123:3) அவர் சித்தம் அறியக் காத்திருந்தால், அவர் நமக்கு பல புதிய ideas கொடுப்பார். நம்மை மார்க்க உலகை வேடிக்கை பார்ப்பவர்களாக அல்ல, அதற்கு contribute பண்ணுபவர்களாகச் செயல்படச் செய்வார்.

*இரண்டாவது,* நமது சாட்சியை தேவகரத்தில் அர்ப்பணித்துக் காத்துக் கொள்வோமாயின் நமது நற்கந்தம் நாலாத் திசையிலும் பரவச் செய்வார். “கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே... நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்—இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கிறோம்” (2 கொரி 2:14-16).


மலருக்கு மணம்தானே சக்தி! மணத்தினால் வசீகரிக்கப்படும் வண்ணத்துப் பூச்சி, தேனீ, வண்டு, சிட்டு போன்றவை வந்து மதுவை உண்டு பயனடைவது மட்டுமல்லாமல், மகரந்தத்தைச் சுமந்து சென்று கனிகளைப் பிறப்பிப்பதுபோல் நமது சாட்சியினால் கவரப்பட்ட பலதரப்பட்டோருக்கு தேவ வசனத் தேனை அளிப்பது நமது சிலாக்கியமாகிறது. தாங்களும் நம்மிடம் கண்டுசெல்லும் முன்மாதிரியினால் கனிதருகிறவர்களாகிறார்கள். தேவ சந்ததி விருத்தியடைகிறது.

*மூன்றாவது,* கன்னிமையின் முழுப் பலனைக் கர்த்தரே ஈய இயலும். “மனைவியானவளுக்கும் கன்னிகைக்கும் வித்தியாசமுண்டு. விவாகமில்லாதவள் உடலிலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமாயிருக்கும்படி, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள். விவாகம் பண்ணினவள் தன்

கணவனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்'' (1 கொரி 7:34). வாழ்க்கையின் சிகரம் கன்னிமையே. அதன் பின்பு இறங்க ஆரம்பித்து விடுகிறோம். அந்நாட்களை தேவ கரத்தில் கொடுப்பது என்ன சிலாக்கியம், என்ன பாக்கியம்! அதைத் தான் பிரசங்கியும், ''நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை'' என்றார். God gets undivided attention during your youthhood!



# 11 சேவலும் கோழியும்



சனிக்கிழமை மாலா வரவில்லை. தவறமாட்டாளே, என்ன ஆயிற்று என்று பார்க்கச் சென்றேன். படுக்கையில் சுருண்டு கிடந்தாள்.

''மாலு, ஏய் என்னடி?''

''வயிற்று வலி''

''என்ன வயிற்று வலி?''

''மென்சஸ்''

''அதற்கு இப்படியா? மாதத்தில் மூன்று நாள் இப்படிக் கிடந்தால் என்னாவது? Lazy goose. எழுந்து வேலையைப் பார். இதெல்லாம் வியாதியென்று நினைக்கக்கூடாது. படுத்துக் கிடந்தால் வயிற்று வலியைத்தான் நினைத்துக் கொண்டிருப்பாய், அது அதிகமாகத் தெரியும். அப்படிச் சகிக்கக்கூடாத அளவு அதிகமாயிருந்தால் ஒரு மாத்திரை போட்டுக் கொண்டு எழுந்திரு.''

''ஏன் தான் பெண்களுக்கு இப்படியெல்லாம் கஷ்டமோ?''

''ஏனா? உங்கம்மா இதையெல்லாம் சொல்லிக்கொடுக்கலையா மாலா?''

''எங்கம்மாவிற்கு அதுக்கெல்லாம் நேரம் ஏது? Ladies' Clubற்குப் போகவும் guestsஐ உபசரிக்கவும்தான் சாயங்காலமெல்லாம் போகிறது. பகலெல்லாம் நான் பள்ளிக்குச் சென்றுவிடுகிறேன். இரவில் என்னைத் திட்டவும் கண்டிக்கவுமே அவர்களுக்கு நேரம் போதாது.''

மாலாவின் கண்களில் விழுந்து சிதறிய ஒளிக்கதிர்கள் அவள் கண்களில் தேங்கிய நீரைக் காட்டிக் கொடுத்தன. வெளியே சிந்திவிடாமல் சிமிட்டி விட்டுக் கொண்டாள்.

எத்தனை வாலிப உள்ளங்கள் இப்படி ஏங்கி மவுனக்கண்ணீர் வடிக்கின்றனவோ, தாறுமாறாய்த் தங்கள் ஏக்கங்களை வெளிப்படுத்துகின்றனவோ.

“இதை நீ அறிந்து கொள்வது நல்லது மாலா. இல்லாவிடில் தவறான வழியில் தவறானவைகளைக் கற்றுக்கொள்வாய்.

“கடவுள் நம்முடைய உடலை அற்புதமாகப் படைத்திருக்கிறார். அதில் வீணானதோ, அருவருப்பானதோ ஒன்றுமில்லை.”

“பெண்களின் உடலமைப்பில் இனவிருத்திக்கான அவயவங்கள் (1) கருப்பை (uterus) (2) ஓவரிகள் (ovaries) (3) வஜைனா (vagina).

“கர்ப்பப்பை அடிவயிற்றினுள், நடுவிலுள்ளது. இரண்டு ஓவரிகளும் கோலிகள் போல வயிற்றினுள் இரு பக்கங்களிலுமிருக்கின்றன. அவற்றை ஃபலோப்பியன் குழாய்கள் கருப்பையோடு இணைக்கின்றன. கருப்பையில் துவங்கும் வஜைனா சிறுநீர் துவாரத்திற்கும் ஆசனவாய்க்கும் நடுவே திறக்கிறது.”

“ஓவரிகள் ஒவ்வொரு மாதம் ஒன்றாக மாறி மாறி வேலை செய்யும். அவை மாதம் ஓர் ஓவம் அல்லது முட்டையை உருவாக்குகின்றன. ஓவம் கண்ணுக்குத் தெரியாத அளவு சிறியது. அது ஃபலோப்பியன் குழாய் வழியே வந்து கர்ப்பப்பையின் உட்புறச் சுவற்றில் தங்கும். ஒரு சில நாட்களில் வெளியே தள்ளப்படும். அப்பொழுது கர்ப்பப்பையின் உட்சுவரும் கரைந்து வஜைனா வழியாய் வெளியாகும். 28 நாட்களுக்கொருமுறை 3-5 நாட்கள் இப்படியாகும். இதைத்தான் தீட்டு அல்லது மென்சஸ் அல்லது பீரியட்ஸ் என்கிறோம். இந்நாட்களில் வயிற்றில் இரத்த ஓட்டம் அதிகரிப்பதால் அடி வயிற்றில் கனதியும் சிலவேளை வலியும் உண்டாகும்.”

“இதற்கு நீ சுத்தமான துணியையோ கடையில் விற்கும் Sanitary Napkinsஐயோ பயன்படுத்தலாம். இந்நாட்களில் டார்க் கலர் ஆடைகள் அணிவது நல்லது.

“இப்படி ஓவம் கர்ப்பப்பையின் சுவற்றில் தங்கியிருக்கும்போது ஆண் வித்தைச் சந்திக்குமானால், அது கருவாகி அச்சுவற்றிலேயே தங்கி வளரும். அப்பொழுது கருப்பையின் சுவர் கரையாமல் கரு வளர்வதற்கேற்ற இட மாகும். ஆகவே கருத்தரித்தால் தீட்டு ஆவதில்லை. ஒன்பது மாதத்தில் ஒரு குழந்தையாகி வெளிப்படும். ஒரு பெண் 12 அல்லது 13 வயதில் இப்பருவம் அடைகிறாள். அதன் பின்பு அவள் எப்பொழுதும் கர்ப்பந்தரிக்கலாம்.”

“ஆண் வித்திற்கு செமன் என்று பெயர். கோழியின் மேல் சேவல் ஏறுவதைக் கண்டிருக்கிறாயல்லவா ? இந்த உடலுறவின்போதுதான் கோழியின் வஜைனாவில் சேவல் தனது செமனைச் சிந்தும்.”




“சில வேளைகளில் எனக்கு 2 அல்லது மூன்று மாதங்களுக்கு மென்சஸ் ஆவதில்லை, எப்படியோ இருக்கும். அம்மா என்னை டாக்டரிடம் கூட்டிச் செல்வார்கள்.”

“டாக்டரிடம் செல்வது நல்லது. ஆனால் பொதுவாக இது வியாதியல்ல. இளமையில் தீட்டு தள்ளி வருவது சகஜம்தான். இதற்காக வைத்தியம் தேவையில்லை. நாளடைவில் ஒழுங்காகிவிடும்.

“அக்கா, thanks. நானாக ஏதேதோ கற்பனை செய்துகொள்வேன். இப்போது தெளிவாக உள்ளது.”

## 12 ஐயையோ பரீட்சை!



செப்டம்டபர் மாதம் நெருங்க நெருங்க மாலாவின் முகம் மாறத் துவங்கியது. பழைய தோல்வியும் பயமும் சேர்ந்து அவளது பால் முகத்தைக் கார்மேகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக்கின.

“அக்கா, நான் நிச்சயம் ஃபெயில் ஆகி விடுவேன். எனக்கு நம்பிக்கையே இல்லை.”

“சீ, சீ, ஏம்மாலா அப்படிச் சொல்கிறாய் ? நான் தரும் சில ஆலோசனை களைக் கடைப் பிடி. கவலையே தேவையில்லை.

“முதலாவது உன் பாரத்தைக் கர்த்தர் மேல் போட்டுவிடு. ஜெயம் கர்த்தரால் வரும், அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

“படிப்பு படிப்பு என்று உன் தினசரித் தியான வேளையை விட்டுவிடாதே. வேத வாசிப்பிலும் ஜெபத்திலும் கிரமமாயிரு.

“உன் முழு முயற்சியையும் உன் படிப்பில் காட்டு. ‘செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பலத்தோடே செய்: நீ போகிற பாதாளத்தில் செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே’ என்று பிரசங்கி 9:10இல் சொல்லுகிறான். தற்சமயம் உன் கையிலிருப்பது படிப்புதான். அதில் உன் முழுச் சக்தியையும் செலவழி. அடுத்த உலகில் நாம் படிக்கப் போவதில்லை. நமது படிப்பு அதாவது செய்கை, வித்தை, அறிவு, ஞானம் யாவும் இவ்வுலகிற்கே. ஒரே ஒரு வாழ்க்கை; அதுவும் சீக்கிரம் கடந்து போகும்; கிறிஸ்துவுக்காய் செய்கிறதொன்றே நிலைக்கும். ஆகவே இன்று நீ படிக்கும் படிப்புதான் நாளை கிறிஸ்துவுக்காய் செய்யப்போகும் செயல்களின் அடித்தளமாகும். செய்வதைத் திருந்தச்செய் என்பது ஆன்றோர் வாக்கு. ஆகவே பிரயாசப்பட்டுப் படி.



“பாஸ்பண்ணும் நோக்கத்துடன் முக்கியக் கேள்விகளை மட்டும் படித்து மற்றவைகளை விட்டுவிடாதே. உன் பிற்கால வாழ்க்கைக்கும் பணிக்கும் அவ்வறிவு தேவைப்படும் என்றறிந்து எல்லாவற்றையும் படி. சிறியவற்றில் உன் உத்தமத்தைப் பார்த்துதான் நாளை தேவன் உன் கையில் பெரிய பொறுப்பை ஒப்படைக்க முடியும். நான் இறைப்பணியில் இறங்கிவிட்டதால் இன்று என் படிப்பை வீணாக்கிவிட்டேன் என்று குற்றஞ்சாட்டுகிறவர்கள் உண்டு. ஆனால் அதைக் கடவுளுக்காய் உபயோகிக்கிறேன் என்று நான் சாட்சி பகர முடியும். அட்டையிலிருந்து அட்டைவரை கவனமும் கருத்துமாய்ப் படி. முக்கியமானவைகளை எழுதிப்பார். அதே வேளையில் இரவும் பகலும் படித்து உடலைக் கெடுத்துக்கொள்ளாதே. நன்றாகச் சாப்பிட்டு தேவையான அளவு தூங்கு. குறைந்த பட்சம் 11—5 தூங்கு.

“பாடங்களை உனக்கிருக்கும் நாட்களுக்கேற்றவாறு பிரித்துக்கொள். பின்பு அட்டவணைப்படி படித்து முடி. ஆண்டவர் மற்றவற்றைக் கவனித்துக் கொள்வார். Do your best and leave the rest.”

சொல்லவும் வேண்டுமோ ? மாலா first classஇல் தேறினாள்.

# 13 ஜாலிலோ ஹாலிடே!



"ஐய்யா, ஐய்யா!"

"அடிக்கொளுத்திவிட்டாயே மாலா."

"கர்த்தருடைய சுத்தக் கிருபைக்கா."

"மேலே என்ன ப்ளான்?"

"அதை யோசிக்க நாளிருக்கிறதே, அதைப் பத்தி இப்ப என்ன கவலை? படுத்துத் தூங்கப்போறேன்.

*பள்ளியில்லை அங்கு பாடமில்லை*
*பரீட்சையில்லை அங்கு டீச்சரில்லை*
*இராஜாதி இராஜா இயேசு*
*என்றென்றும் ஆண்டிடுவார்!*

பாடிக்கொண்டே குதித்தாள். எனக்குச் சிரிப்பு வந்தது. வாலிப உலகமே தனிதான். அதை கடந்து விட்டோமே என்று வருந்தினேன்.

"அட ச பயித்தியமே. அதெல்லாம் மில்லெனியத்தில்தான். இப்ப தூக்கத்திற்கு என்ன குறை?"

"வேறு என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?"

"ஒங்க கோயில்ல VBS நடக்குமில்ல?"

"ஆமா என்னவோ பேச்சு நடக்கு."

"அதுல ஒரு டீச்சரா சேந்துக்கோ. பிற்கால ஊழியத்திற்கு அதிக பயன்படும்."

"ஐயையோ, எனக்குப் பயமா இருக்குப்பா."

"என்ன ஐயையோ? இந்த கைய உதறுவது, நாக்கை நீட்டுறது எல்லாம் விட்டிடணும். சின்னப்பிள்ளைகளுக்கு எடுக்கவா பயம்? உனக்கே அது அதிக பிரயோஜனமாயிருக்கும்.

"ஏன் மாலா இன்னும் உனக்கு 6 மாதங்களுக்குமேல் இருக்கிறதே நான் ஒன்று சொல்லுகிறேன் கேள்."

"ஐயோ ... அக்கா ... நல்லநாளுமதுவாய் ..."



"இரண்டு நாள் தூங்குவாய். பின்பு உனக்கே bore அடித்துவிடும்."

"நன்றாகப் பைபிள் வாசிக்கப் போகிறேன்; ஜெபிக்கப்போகிறேன்."

"அதைச் செய். யாரும் வேண்டாமென்று சொல்லவில்லை. அதோடு நீ ஏன் கம்ப்யூட்டர் படிக்கக்கூடாது? காலையில் கம்ப்யூட்டர் படி. மாலை இந்தி படி. உனக்கு அதிகப் பயன்படும். ஒரு நல்ல Study Bible சொல்லுகிறேன். அதை வாங்கி மீதி நேரத்தில் படி. நல்ல மிஷனரி வாழ்க்கைப் புத்தகங்கள் தருகிறேன், படி. Readers' Digest வாசி. Newspaper படி. உன் உலக அறிவும் கூடவே வளர இவை அனுகூலமாகும்.

"ஒரு எஜமான் வேலைக்காரருக்குத் தாலந்துகளைக் கொடுத்துப் பிரயாணம் போனானாம். தன் தாலந்துகளைக்கொண்டு வியாபாரம் பண்ணி வேறு தாலந்துகளைச் சம்பாதித்தவனைத்தான் எஜமான், 'நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி' என்று பாராட்டினானாம். தேவனுடைய காரியத்திற்காக நம்மை அர்ப்பணித்திருக்கிற நாம் ஒரு வியாபாரத்தில் ஈடுபட்டதுபோலத்தான். Maximum சம்பாதிக்கவேண்டும். மேலும் மாலா, இப்படிப்பட்ட நாட்கள் இனி உனக்குக் கிடைப்பதரிது. கிடைக்கும் நாட்களைப் பயன்படுத்திக்கொள்."

"அக்கா, அதிகப் படிப்பு உடலுக்கிளைப்பு."

"ஜோக்கடிக்காதே, போ. என்னவோ, எங்களுக்கு வாலிப நாட்களில் இதையெல்லாம் யாரும் சொல்லித்தரவில்லையே என்றுதான் உனக்குச் சொல்லிவைக்கிறேன், பிறகு உன் இஷ்டம்."

# 14 தன்னந்தனியே !



மாலா ஒரே busy ஆகிவிட்டாள். சும்மா இருக்கும்போதெல்லாம் விரல்கள் டைப் அடிக்கும். எது கேட்டாலும் *"க்யா ஹை"* பதில் அவளுக்குப் பழமையாகாத விளையாட்டாகிவிட்டது.

"டவுன் ஹாலில் ஒரு special meeting இருக்கிறதே, வருவாயா மாலா ?"

*"நஹீங் ஹை.* அப்பாவைக் கேட்டேங்க்கா, கூட்டம் முடிய நேர மாகிவிடுகிறது. இரவில் நீ தனியே வரக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். மறுபடியும் சோப்புப் போடவேண்டும்."

"நான் கூட அதை நினைக்கவேயில்லை மாலா, நீ வராமலிப்பது நல்லதுதான். நீ திரும்பும் வழி மிகத் தனிமையாகத்தான் இருக்கிறது."

"எனக்கு அதெல்லாம் ஒண்ணும் பயமில்லையக்கா."

"அதற்காகச் சொல்லவில்லை மாலா. உலகம் மிகவும் கேடான நிலையில் சென்றுகொண்டிருக்கிறது. பெண்கள் தனியாக ஆள் நடமாட்டமில்லாத இடங்களுக்குச் செல்வது ஆபத்து. இப்படியும் ஒரு பாவம் உண்டு என்று அறியாததினால் தைரியமாய்த் தனியாய்ச் சென்று, காமவெறிகொண்ட ஆண்கள் கையில் அகப்பட்டுக் கற்பழிக்கப்பட்ட பெண்கள் அநேகர். இதைத்தான் rape என்று சொல்லுவர். இப்படித்தான் தனியாக ஊர் சுற்றிய தீனாள் கற்பழிக்கப்பட்டாள். ஆதியாகமம் 34ஆம் அத்தியாயம் வாசித்துப்பார். இவைகளெல்லாம் நமக்குப் படிப்பினையாக எழுதப்பட்டிருக்கின்றன. சொல்லப் போனால் பெண்கள் அல்லது சிறுவர் துணையும்கூட போதாது.



"இன்று நீ பெற்றோரின் பாதுகாப்பிலிருக்கிறாய். நாளை ஹாஸ்டலுக்குப் போய்விட்டால் இதெல்லாம் தெரிந்திருக்கவேண்டுமே என்றுதான் சொல்லு கிறேன். அதனால்தான் செய்தித்தாள் படிப்பது அவசியம். சிலர் அதெல்லாம் *வேஸ்ட் ஆஃப் டைம்,* பாவம் என்று சொல்லி உலகத்திற்குத் தங்கள் கண்களை மூடிக்கொள்கின்றனர். அப்படியும் நம்மை முட்டாளாக்கிகொள்ளக் கூடாது. நாம் அதிகப் பரலோக சிந்தையாவதினால், பூலோகத்தில்தான் இருக்கிறோம் என்பதை மறந்துபோகக்கூடாது. மேகத்தில் தலை தவழும்போது கால்கள் பூமியில் பாவியிருக்கவேண்டும்.

"இதனால்தான் மாலா, ஒருவேளை நமது பெற்றோர் இரட்சிக்கப்படாத வர்களாயிருந்தாலும் அவர்களுக்குரிய கண்ணியத்தையும் மதிப்பையும் நாம் கொடுத்து அவர்கள் சொல்லுக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டுமென்பது. அவர்கள் உலகத்தை அறிந்தவர்கள். பெற்றோருக்குப் பிள்ளைகள் அடங்கி யிருக்கவே வேதம் போதிக்கிறது. பத்துக் கட்டளையிலும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்று இக்கட்டளை ஓர் ஆசீர்வாதத்தைக் கூட்டியே வருகிறது. நீதிமொழிகளை வாசித்தால் திரும்பத் திரும்ப இதேதான். 1: 9ஐப் பார். "என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே." அவைகளை எப்பொழுதும் உன் இருதயத்தில் அணிந்துகொள்ள வேண்டுமாம். உன் கழுத்தில் கட்டிக்கொள்ள வேண்டுமாம். நீ நடக்கும்போது அது உனக்கு வழி காட்டும்; நீ படுக்கும்போது அது உன்னைக் காப்பாற்றும்; நீ விழிக்கும்போது அது உன்னோடே பேசும் என்று 6:20-22இல் சாலமோன் சொல்லுகிறார். 13:1ஐ எடு. "ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதகத்தைக் கேட்கிறான்." 15:15ஐப் பார். "மூடன் தன் தகப்பன் புத்தியை அலட்சியம் பண்ணுகிறான்." இன்னும் எத்தனை எத்தனையோ! நீதிமொழிகளின் புத்தகத்தை அடிக்கடி வாசி. இந்த உலகில் உன் நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான சத்தியங்களை அது தெளிவாய்ப் போதிக்கும்."

"புதிய ஏற்பாட்டிலும் இந்த ஒழுங்கு மாறவில்லை. எபேசியர் 6:1இல் 'பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் நம்மைக் கடவுளுக்கு விரோதமாக எதையாவது செய்யத் தூண்டினாலொழிய மற்றெல்லாவற்றிலும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். வயதைக் கனம்பண்ண வேண்டும். வயதினால் வரும் ஞானம் விலையேறப்பெற்றது. பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து இருப் பதினால் வயதாகுமுன்பே அந்த ஞானத்தை நாம் சுலபமாய் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். ஆபத்து சமயங்களில் பயந்து அழுதுகொண்டு கிடக்காமல் பெற்றோரின் உதவியை நாடவேண்டும்.


“மேலும் மாலா, அறிமுகமாகாதவரை அதிகமாய் நம்பாதே. புதியவரிடம் பெயரையோ விலாசத்தையோ கொடுக்காதே. அறியாதவர் கொடுக்கும் பொருட்களை வாங்கிக் கொள்ளாதே. யாரோ lift கொடுத்தால் உடனே காரில் ஜம் என்று ஏறிவிடாதே. தனிமையான இடங்கள் வழியே செல்லவேண்டி வந்தால் ஆட்டோ, டாக்சியில் செல்வதைவிட பஸ்ஸில் செல்வதே நல்லது. ஞானமாய் நடந்துகொள்.”

“எல்லாம் கடவுள் காப்பாத்துவார் அக்கா.”

“உண்மைதான் மாலா. எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளுடைய பாதுகாக்கும் கரம் இருக்கிறது. ஆனால் வலையில் காலை விட்டுக்கொண்டு கடவுளே, கடவுளே என்று கதறுவதைவிட யூகமாய் வலைகளுக்குக் கால்களை விலக்கிக் காத்துக்கொள்வதையே ஞானம் என்பேன்.”



# 15 மாலா நீரோடை வாஞ்சித்து...



“அக்கா, பைபிளை ஒரு முறை வாசித்து முடித்து விட்டேன்.”

“பரவாயில்லையே, very good!”

“ஆனால் அண்ணன் பேசுவதைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. எப்படி எப்படியோ, எதை எதையோ கோர்த்துச் சொல்லுகிறார்களே! எப்படிக்கா ? தினகரன் அண்ணன் என்னவென்றால் அருவிபோல் வசனங்களைப் பொழிகிறார். அப்பப்பா, என்ன ஞானமோ அது!”

“மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் என்பது வேத நியமம். அப்படியே நமது முயற்சிக்கேற்ற பலனைப் பெற்றுக்கொள்வோம். நமது முயற்சியோடு தேவன் தமது கிருபை வரங்களைக் கூட்டுகிறார். தேவபக்திக்கேதுவாக முயற்சி பண்ணு.

“காலையில் தமிழ் வேதாகமத்தை வாசித்தால் மாலையில் ஆங்கிலம் உபயோகி. ஆங்கில வேதாகமத்தில் பழகுவதில் பெரிய ஆதாயமுண்டு. வேத ஆராய்ச்சி நூல்களும், அகராதிகளும், துணைகளும் ஆங்கிலத்தில் ஏராளம், ஏராளம்! ஆகவே முதலாவது உன் பொடி எழுத்து ஆங்கில வேதாகமத்தை விட்டு ஒரு பெரிய டைப் வாங்கு.

“வாசிக்கும்போது அடையாளக் குறிகளையிடத் தயங்காதே. வேதாகமம் வீணாகிவிடுமே என்று நினைக்காதே. பழமையானால் வேறே வாங்கிக் கொள்ளலாம். படிப்பதுதான் முக்கியம். எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகள் என்று வேதம் பெண்களைக் குறிப்பிடுகிறது. ஆகவே அப்பழியை நாம் சுமக்காத படிக்கு அறிந்து உணருதல் அவசியம்.

“வேதத்தை வாசிக்கும்போது, அன்று நீ வாசிக்கும் பகுதியின் மூலம் கடவுள் உன்னோடு பேசுகிறார் என்ற உணர்வுடன் வாசி. அப்பகுதியில் உனக்கு என்ன சொல்கிறார் என்று கவனித்துப்பார். வசனங்களை மனனம்

செய்வது நல்ல பழக்கம். தினந்தோறும் ஒரு வசனமாவது படித்து நல்ல பகுதிகளை மனனம் செய். மலைப்பிரசங்கத்தில் துவங்கு. நன்றாக இருக்கும்.

“கொஞ்சம் மாடிக்கு வாயேன். அண்ணனுடைய வேதாகமங்களைக் காட்டுகிறேன். அவர்கள் வாலிப நாட்களில் உபயோகித்த வேதாகமத்தைத் திறந்து பார்.”

“என்னக்கா இது, இப்படிப் படித்திருக்கிறார்கள்!”

“குறிக்க இடமில்லாமற்போன காரணத்தால் இதற்குள் எத்தனையோ பைபிள்கள் மாற்றிவிட்டார்கள்.”

“இதையெல்லாம் பார்க்கும்போது எனக்கு இன்னும் இன்னும் வேதம் வாசிக்க ஆசையாக இருக்கிறது. ஆனால் ஜெபம்தான் எனக்குப் பிரச்னை. முழங்கால்படியிட்டவுடனே எதை எதையோ நினைக்க ஆரம்பித்துவிடுகிறேன்.”

“ஜெபிப்பதற்காய், குறிப்பிட்ட நேரங்களையும் இடத்தையும் குறிப்பது நல்லது. எப்பொழுதாவது ஜெபிக்கலாம் என்றால் எப்பொழுதுமே ஜெபிக்க மாட்டோம். காலை 5.30-6.30, இரவு 9-9.30. இப்படி வசதியான வேளையை வைத்து, அவ்வேளை வந்தவுடனே முழங்கால்படியிடு. இது அநேக தவறு களுக்கு உன்னை விலக்கிக் காக்கும்.

“தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு அல்லது முகங்குப்புற விழுந்து ஜெபிக்காதே. தூங்கிவிடுவாய்.”

“உங்களுக்கு ரொம்ப எக்ஸ்பீரியன்ஸ் போலிருக்கு!”

“சும்மாக்கெடடி. வாய்விட்டே ஜெபி. அப்பொழுது கவனம் சிதறாது. ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவளாக ஜெபிக்காமல் குறிப்பாக ஜெபி. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று பேப்பரில் குறித்து வைத்துக்கொண்டு ஜெபிப்பது நல்லது. ஜெபிக்கும்போது செய்ய வேண்டியது ஏதாவது நினைவில் வந்தால் எழுந்து ஓடாதே. மறக்காமல் பிறகு செய்யும்படி ஒரு தாளில் குறித்துக் கொள். அப்பொழுது மனம் அலையாது அடங்கிவிடும். ஜெபிக்கும்போது வேதத்தையும் வைத்துக்கொள். கடவுள் ஒரு வசனத்தை நினைவூட்டலாம். முதலில் கடவுளைத் துதி; அதாவது அவரது மகத்துவங்களைப் போற்றிப் புகழு; பின்பு நீ தேவனிடம் பெற்ற நன்மைகளுக்காய் அவருக்கு நன்றி செலுத்து; பின்பு சிறிது நேரம் இருதய ஆராய்ச்சியில் செலவிட்டு அன்றையப் பாவங்களை அறிக்கையிட்டு இரத்தத்தால் கழுவப்படு. அடுத்து உன்



விண்ணப்பங்களை ஏறெடு. உன் குடும்ப இரட்சிப்பிற்காக ஜெபி. அந்த நாளின் முக்கிய காரியங்களுக்காக, வாழ்க்கையின் முக்கிய காரியங் களுக்காக, தேவ சித்தத்தை அறிய ஜெபி. மாலை ஜெபத்தை ஆத்து மாக்களுக்காகவும், ஊழியங்களுக்காவும், எழுப்புதலுக்காகவும் வைத்துக் கொள்வது நல்லது.

“*ஜெபவேளை எமக்கானந்தம்* என்று பாடுவது போன்று அநேக வேளைகளில் நமது ஜெபவேளை இருப்பதில்லை. ஜெபத்தில் தோல்வியடைந்தவள் கிறிஸ்தவ வாழ்வில் தோல்வியடைந்தவள் என்று நன்கறிந்த பிசாசு இங்கேயே அதிகமாய்க் குறுக்கிடுகிறான். ஆகவே விடாமல் ஜெபி. தொடர்ந்து ஜெபி. ஊக்கமாய் ஜெபி. ஆண்டவர் கேட்கிறாரோ எனும் சந்தேகம் வரும். ஆனாலும் ‘ஆம்’ என்ற உறுதியுடன் ஜெபி. தூங்கிப் போய்விட்டால் விழித்தவுடன் ஜெபி. தூக்கம் வந்தால் நடந்து கொண்டே ஜெபி. எக்காரணத்தையிட்டும் விட்டுக்கொடுக்காதே.”

“தேவனை அறிய ஒரு வாழ்க்கை போதாதுப்பா.”

“உண்மைதான்டி மாலு.”

“அப்பா எனக்குக் காசு அதிகமாகக் கொடுப்பதில்லை. கொடுத்தால் நான் எல்லாம் வாங்கிவிடுவேன். எதற்கெடுத்தாலும் ஊஹூம், ஊஹூம், முடியாது, முடியாது, காசில்லை, காசில்லை.”

“மாலா, அப்பா உனக்கு கிறிஸ்துமஸிற்கு வாங்கிக்கொடுத்த துணி களின்மேல் திருப்தியில்லாமல் பேசினாயே, அப்போதே சொல்லவேண்டுமென்று நினைத்தேன். பிறகு நான் உன்னை எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டுபிடித்து நச்சரிக்கிறேனென்று நினைத்துக்கொள்வாயோ என்றுதான் சொல்லவில்லை. உன் நிலைமையிலே நீ திருப்தியாயிருக்கப் பழகவேண்டும். பணம், துணி, ஆகாரம், படிப்பு, வீட்டு வசதிகள் எல்லாவற்றிலும் போதுமென்ற மனம் வேண்டும். அப்படிப்பட்ட தேவபக்தியே மிகுந்த ஆதாயம். முறுமுறுப்பு தேவனுக்கு விரோதமான பாவம் என்று வேதம் கூறுகிறது. தேவன் கொடுத் திருக்கிற எல்லாவற்றிலும் சந்தோஷமாய்த் திருப்தியாயிரு. எல்லாவற்றிற்காக வும் ஸ்தோத்திரம்பண்ணு. வீண் செலவுகள் செய்யாதே.”

“எனக்கு ஒரு idea தோணுதக்கா. ஓர் உண்டியலில் சேர்க்க ஆரம்பிக்கப் போகிறேன். பாக்கெட் மனியில் மிச்சம் பிடித்து நல்ல Bible ஒன்று வாங்குகிறேன்.”

"வாங்கு. உண்டியல் காசில் பத்தில் ஒன்றைக் காணிக்கையாகக் கொடுத்துவிடு."

"சுத்தி வளச்சி பையில கை வச்சுடுறீங்களே!"

"என்னிடத்தில் கொடு என்றா சொல்கிறேன்? எப்படியோ தேவனுக்காய் அது செலவழிக்கப்பட வேண்டும்."



# 16 பார், பார், பட்டணம் பார்!



"அக்கா, மெட்ராசில் இடம் கிடைத்துவிட்டது. அடுத்த வாரம் புறப்படவேண்டும். உங்கள் ஐக்கியத்தை அதிகமாய் மிஸ் பண்ணுவேன்."

"போன வருடம்போல் குட்டிக்கரணம் போட்டுவிடாமல் ஒழுங்காய்ப் படித்து பாஸ் பண்ணு."

"எப்போது போவேனோ என்று ஆசையாக இருக்கிறது. முதன்முதலாக ஹாஸ்டலுக்குப் போகிறேன்."

"புதுத் துடைப்பம் நன்றாகத்தான் இருக்கும். ஒரு வாரத்தில் ஓடி வந்து விடுவாய்."

"பார்க்கலாமா?"

"பார்க்கலாம்."

"என்ன bet?"

"சரி, ஹாஸ்டல் காரியங்களை நீ அறியக் காலமாகிவிட்டது."

"ஒரு பெரிய பிரசங்கம் பண்ணுவீர்களே."

"வேணுமா, வேண்டாமா ?"

"வேண்டாமென்றால் விட்டுவிடுவீர்களா என்ன!"

"சென்னை நாகரீகமான இடம். எல்லா நாகரீகத்தையும் கற்றுக்கொள்ளாதே. மாணவியர் ஆசிரியர்களை மதிப்பதில்லை. உனக்கும் கிறிஸ்துவை அறியாத மாணவியருக்கும் வித்தியாசம் தெரியவேண்டுமென்றால் அதை நீ ஆசிரியரிடம் காட்டும் மதிப்பு, மரியாதை, பண்பு, கீழ்ப்படிதலில்தான் காட்டவேண்டும். ஆசிரியைகள் எப்படிப்பட்டவராயிருந்தாலும், கிறிஸ்தவரோ, கிறிஸ்தவரல்லாதவரோ, உன்னை அவர்கள் மதிக்கும் அளவிற்கு ஒழுங்குடன் நடந்துகொள்ளவேண்டும். ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் badge ஒழுங்குதான். Punctuality is a Christian virtue என்பதை நினைவிற்கொள்.


"பட்டணங்களிலெல்லாம் ஆடவரிடம் பழக அநேக வாய்ப்புகள் வரும். ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள். எட்டி நின்று கண்ணியமாய் கட்டுப்பாடுடன் நடந்துகொள்ளும் பெண்களையே ஆண்கள் மதிப்பர். தங்கள் விருப்பத்திற்கு இசையும் பெண்களைத் தங்கள் இச்சையைத் திருப்தி செய்யப் பயன்படுத்திக் கொள்வரேயன்றி மதிக்கமாட்டார்கள். 'வாலிபனே! (நங்கையே) உன் இளமையிலே சந்தோஷப்படு; உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி,' என்ற வசனம் உன் இருதயத்தை விட்டு நீங்க வேண்டாம்."

"ம்... தொடரட்டும்."

"நீதான் தொணதொணவென்று பேசுவாய். நான் காரியமாய்ப் பேசுகிறேன். நீ போதும் என்று செல்வதற்குமுன் நானாகவே நிறுத்திக்கொள்கிறேன். போகுமுன் வந்துவிட்டுப் போ. அண்ணனும் ஊரிலிருந்து வந்துவிடுவார்கள். ஜெபித்து அனுப்புவார்கள்."



# 17 ஹாஸ்டல் லைஃப்



ஜூலை 8, 1978

அன்புள்ள அக்காவுக்கு பிரியமான மாலா எழுதிக்கொள்வது...

அன்பின் வாழ்த்துக்கள்.

சுகமாயிருப்பீர்களென்று நம்புகிறேன். அக்கா, நான்தான் betஇல் தோத்துவிட்டேன். எனக்கு இங்கு பிடிக்கவேயில்லை. வீட்டுக்கு எப்போ வருவேனென்றிருக்கிறது. சாப்பாடு நன்றாகவேயில்லை. சாப்பிடவே முடியவில்லை. அதுவே எனக்குப் பலவீனமாக இருக்கிறது. இளைத்துவிட்டேன். சீனியர்ஸ் எங்களை அதிகமாக டீஸ் பண்ணுகிறார்கள். நேற்று இரவு இரண்டு மணிவரை அழுதுகொண்டேயிருந்து தூங்கிவிட்டேன். இங்கு எப்படிப் படிப்பேனோ தெரியவில்லை. என் room mate என்னோடு நன்றாகப் பழகுகிறாள். பெயர் ஆர்த்தி. ஆனால் அவளைப் பார்க்க ஒரு பையன் வருகிறான். இந்த வாரத்தில் இரண்டுமுறை வந்துவிட்டான். மரத்தடியில் நின்று பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். வெளியேயும் போய் வருகிறார்கள். அவளோடு இருக்கவே எனக்குப் பிடிக்கவில்லை. ரூம் மாறிவிடப் போகிறேன்.

எல்லாவற்றிலும் பெரிய கஷ்டம் எனக்கு விடுதலையோடு ஜெபிக்க முடியாததுதான். வகுப்புகள் பரவாயில்லை. கரிசனையோடு யாரும் சொல்லிக் கொடுப்பதில்லை. என்னை யாரோ கடலில் தூக்கிப் போட்டுவிட்டதைப் போலிருக்கிறது. எனக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். சீக்கிரமாக உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

உங்களுக்கு எனது அன்பும் வணக்கமும்.

உங்கள் அன்பை மறவாத
மாலா.

ஆகஸ்டு 3, 1978

அன்புள்ள மாலா,

அன்பர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

மாணவர் முகாம் ஒன்று நடத்திவிட்டு நேற்றுதான் திரும்பினோம். உன் கடிதத்தைக் கண்டேன். ஆம், உனக்குத் துவக்கத்தில் சற்று கஷ்டமாகத்தான் இருக்கும். வர வர சரியாகிவிடும். உனக்காக நாங்களும் விசேஷமாக ஜெபிக்கிறோம். இப்படிப்பட்ட அனுபவம் உனக்கு அவசியம்தான். சொந்தக் கால்களில் நிற்கப் பழக வேண்டும். "கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின் மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின் மேல் சுமந்துகொண்டு போகிறதுபோல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்" (உபா 32:11,12). என்றுமே கர்த்தர் உன்னைக் கூட்டில் வைத்து வைக்கமாட்டார். நீ பறக்க பழக வேண்டும். ஆனால் கர்த்தருடைய செட்டைகள் எப்போதும் உன்னடியில் அசைவாடும்.

ஹாஸ்டல் சாப்பாடு அப்படித்தானிருக்கும். மூன்று வேளை ஆகாரத்தை முழுமையாக உட்கொள். கறி, மீன், முட்டையில்லாமல் சாப்பிடமாட்டேன் என்று இனி அடம் பிடித்தாயானால் உன் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வாய். காய்கறி, பழங்கள், பருப்பு வகைகளில் அதே புரோட்டீன் சத்துக்களும் வைட்டமின் சத்துக்களும் உண்டு. அதைத் தள்ளிவைத்தால் பலங்குன்றுவாய். மோர், தயிர் நன்றாகச் சேர்த்துக்கொள். அது உடம்புக்கு நல்லது. சும்மா பிஸ்கட்டுகளையும், சாக்லேட்டையும், எண்ணெய்ப் பலகாரங்களையும் சாப்பிட்டு சாப்பிட்டு உன் நலத்தைக் கெடுக்காதே. உடல் கடவுளுடைய ஆலயமாயிருக்கிறது. அதைப் பேணுவது நமது கடன்.

சீனியர்ஸிடம் பணிவுடனும் அன்புடனும் நடந்துகொள். என்ன, நீ சீனியராகும்போது ஜூனியர்ஸை டீஸ் பண்ணக்கூடாது. எதற்காக ரூம் மாற்ற வேண்டும்? இன்னொருத்தி இந்த ஆர்த்தியைவிட நல்ல தி-யாக இருப்பா ளென்பது என்ன நிச்சயம்? அப்படிப் பார்த்தால் நீ உலகத்தைவிட்டே போக வேண்டியிருக்குமே! உன்னைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள். மெதுவாக அவளிடம் கிறிஸ்துவைப் பற்றிப் பேசு.

ஏதாவது ஒரு ஜெபக்குழுவில் இணைந்துகொள். கட்டாயம் ஏதாவதொரு ஜெபக்குழு இருக்கும். விசாரித்துப் பார். அப்படியிராவிட்டால் ஜெபத்தோடு ஒன்று துவங்க நீயே முற்படு. கிறிஸ்தவ மாணவிகளைச் சந்தித்துப் பேசு. கடவுள் உன் முயற்சியை ஆசீர்வதிப்பார்.



வருட ஆரம்பத்திலிருந்தே கருத்தாய்ப் படி. மொத்தமாகச் சேர்த்துப் படித்துக் கொள்ளலாம் என்று அசட்டையாக இருந்து விட்டு கடைசியில் லபோ லபோ என்று அடித்துக் கொள்ளாதே.


NCC, Girl Guides, games, sports இவைகளிலெல்லாம் சேர்ந்துகொள்ளத் தயங்காதே. கடினமான பிற்கால வாழ்க்கைக்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதே நல்லது. இதெல்லாம் உனது futureக்கு கடவுள் கொடுக்கும் training என்று நினைத்துக்கொள்.

நீ போகும் முன் சந்தித்தோமே, அந்த வள்ளி ஆண்டவரை ஏற்றுக் கொண்டாள், வீட்டில் பல பிரச்னைகளை அனுபவிக்கிறாள். ஜெபித்துக் கொள். அடிக்கடி கடிதமெழுது. நீ யாருடைய fan?

உன் அன்புள்ள அக்கா.

செப்டம்பர் 10, 1978

அன்புள்ள அக்கா,



உங்கள் அன்பான கடிதம் விடாய்த்த ஆத்துமாவிற்குத் தூர தேசத்திலிருந்து வரும் நற்செய்தி போலிருந்தது. நான் கொயரில் சேர்ந்திருப்பதால் சாயங்காலம் அடிக்கடி practiceக்குப் போக வேண்டி வருகிறது. ஆகவே உடனடி யாகப் பதில்போட முடியவில்லை. மன்னித்துக்கொள்ளுங்கள். எத்தனையோ தரம் உங்களை அதிகப்பிரசங்கி என்று கிண்டல் செய்தேன். நிழலின் அருமை வெயிலில்தான் தெரிகிறது.

“நீ யாருடைய fan” என்று எழுதியிருந்தீர்களே ஏங்கா? நான் என்றுமே ஜீசஸ் fanதான்.

நான் ஆர்த்தியிடம் பேசினேன். எதிர்க்கவும் இல்லை; ஏற்றுக்கொள்ளவும் இல்லை. இன்னும் இரண்டு பேரிடம் பேசினேன். என் classmatesதான். இருந்தாலும் என்னை fanatic என்பதுபோல் ஏற இறங்கப் பார்த்தார்கள். ஞாயிறு கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்பும்போது ஒரு பிள்ளையிடம் நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா என்று மெதுவாக கேட்டேன். அவள் சத்தமாய், கோபமாய், “இந்தக் காலத்தில் இது ஒரு fashion. கிறிஸ்டியன்சையே பார்த்து இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா என்று கேட்கிற கூட்டம் கிளம்பியிருக்கிறது” என்று கத்திவிட்டாள். எல்லோரும் என்னைத் திரும்பிப் பார்த்தார்கள். எனக்கு அவமானமாகப் போய்விட்டது. சோல்வின்னிங் இன்ட்ரஸ்டே போய்விடும் போலிருக்கிறது. பள்ளி நாட்களை நினைத்து ஏங்குகிறேன். இந்த காக்காக் கூட்டத்தோடு நான் எப்படித்தான் மூன்றாண்டுகள் சமாளிக்கப் போகிறேனோ! காலேஜ் டே நடந்தது. ஒரே அட்டகாசம். இனி எவ்வித விழாக்களிலும் கலந்து கொள்வதில்லை என்று தீர்மானித்துவிட்டேன்.

மனமடிந்த மாலா.



செப்டம்பர் 22, 1978

அன்புள்ள மாலா,

என்னைக் கிண்டல் செய்த உனக்கு நன்றாக வேண்டும். ‘Fans’ என்றால் தெரியாது? சும்மா கப்ஸா விடாதே. காலேஜில் ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொருத்தி பின்னால் சுத்துவாளே. அப்படி நீயும் யாரையாவது பிடித்தி ருப்பாயென்று நினைத்தேன். உனக்குத் தெரியாதவரைக்கும் நல்லதுதான்.

சோல்வின்னிங் இன்ட்ரஸ்ட் வந்த வேகத்தில் போய்விட்டதா? பாடம் கஷ்டம், நான் இரண்டாம் க்ளாசிலேயே இருந்துகொள்ளுகிறேன் என்று சொல்லிவிடுவாய் போலிருக்கிறதே! ஆத்தும ஆதாயக் கிருபையோ, கடவு ளுடைய வேறெந்த ஈவோ ஜெபித்தவுடன் பரலோகத்திலிருந்து பார்சலாகத் தொப்பென்று விழுந்துவிடாது. நாமே முயன்று முயன்று, பயின்று பயின்று தேற வேண்டும். அதற்குக் கடவுள் உதவிசெய்து வழிநடத்துவார்.

பள்ளி ஒரு virgin soil. பசும் உள்ளங்களை இரட்சிப்பிற்குள் நடத்துவது சுலபம். ஆனால் கல்லூரிப் பருவத்தினரை இயேசுவுக்காய்ப் பிடிப்பதுதான் சவாலான வாழ்க்கை. தினமும் காலையில் அந்த நாளிலே கடவுள் சில ஆத்துமாக்களைக் கொடுக்கும்படியாய் ஜெபி. பின்பு அந்த நாள் முழுவதும் தாகமுள்ள ஆத்துமாக்களிடம் தேவன் நடத்தும்போது அதைக் கண்டு கொள்ளும்படி கவனமாயிரு. இதில் விசேஷ ஞானத்திற்காய் ஜெபி. மாணவியர் வெளித்தோற்றத்தில் உல்லாசமாய்த் தெரிந்தாலும் உள்ளே வெறுமையும், தனிமையும், வெறுப்பும், பயமும், ஏமாற்றமும் நிறைந்தவர்கள். ஆகவே அப்படிப்பட்ட தேவையை நீ அவர்களில் நுகரும்போது அதைச் சாதகமாகக் கொண்டு அவர்களிடம் பேசு.

எவ்வித விழாக்களிலும் இனிக் கலந்து கொள்ளப்போவதில்லை என்று எழுதியிருந்தாய். ஒருநாள் எங்கள் வீட்டில் சந்தித்தாயே அந்த நிலாவை உனக்கு நினைவிருக்கிறதா? அவள் சூரத்தில் எஞ்சினீயரிங் சேர்ந்திருக் கிறாள். அவளும் இதேதான் எழுதியிருக்கிறாள். அவளுக்கும் இன்று கடிதம் எழுதியிருக்கிறேன். ஆத்தும ஆதாயத்தில் உன் வெற்றி நீ சக மாணவியருடன் பழகும் விதத்திலேயே இருக்கிறது. அவர்கள் உன்னை விநோதம் என்று ஒதுக்கிவிடக் கூடாது. அதே சமயத்தில் உன்னில் ஒரு வித்தியாசத்தையும் பரிசுத்தத்தையும் காணவேண்டும். எல்லாரோடும் தாராளமாய்ப் பேசிப்பழகு. ஆனால் வீண் பேச்சு என்னும் பாவத்தில் விழுந்து விடாமல் கவனமாயிரு. பிற மாணவியரோடு பழகும்போது அவர்களது தனிப்பட்ட தேவையை உணர தேவன் உன் கண்களைத் திறப்பார். அவர்களிடம் பேச உனக்குச் சாதகமான

சூழ்நிலையையும் உருவாக்கித் தருவார். அவர்களுக்காக ஜெபி. அப்பொழுது இரகசியமாய்ப் பார்க்கிற உன் பரம தந்தை தாமே உனக்கு வெளிப்படையாய்ப் பலனளிப்பார்.

கொக்கு மீன் பிடிப்பதைப் பார்த்திருக்கிறாயா? அது அத்தனை வெண்மையாயிருந்தும் அசையாமல் நிற்பதால் மீன்கள் தைரியமாக அருகில் வரும். சமயம் பார்த்து கொக்கு மீனைக் கவ்வும். இது ஆத்தும ஆதாயத்துக்கு நல்ல பாடம். குளம் உலகம். கொக்கைப்போல நாம் தூய்மையாக உலகத்தில் நின்றாலும் பிறர் நம்மைப் பார்த்து ஓடும் அளவிற்கு நாம் நடந்து கொள்ளக் கூடாது. அவர்கள் நம்மை நம்பி வரும்படி நமது நடவடிக்கைகள் இருக்க வேண்டும். அப்படி அவர்கள் அருகில் வரும்போது அவர்களை ஆதாயப்படுத்த வேண்டும்.

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் இருக்க வேண்டும். அதே சமயம் "பாவிகளுக்கு" சிநேகிதியாயிருக்கவேண்டும் (சங் 1:1; மத் 9:10-13). அதாவது பாவிகளோடு நெருங்கிய ஐக்கியம் (fellowship) வைக்கக்கூடாது, ஆனால் நட்பு (friendship) கொள்ளவேண்டும். மீன் நிறைந்த கடல் உலகம்தான். நமது வாழ்க்கை ஏலேலோ ஐலேசாதான். ஆகையால் தேவன் உன்னை இந்தக் கல்லூரிக்குக் கொண்டுவந்ததில் ஒரு பெரிய நோக்கமுண்டு. அந்த நோக்கத்தை நிறைவேற்றும்படி விழிப்பாயிரு.

(எங்கும் + ஞானம்) + (எப்பொழுதும் + புன்னகை) + (எவரிடமும் + அன்பு)—
(தயக்கம் + பயம் + வெட்கம்) = ஆத்துமா X ஆத்துமா X ஆத்துமா

பாருக்குள்ளே நீ ஒரு சாட்சி; ஊருக்குள்ளே நீ ஒரு மிஷனரி!

உன் பழைய பள்ளித் தோழிகளுக்குக் கடிதம் எழுதுகிறாயா? அவர்களோடு கடிதத் தொடர்பை விட்டுவிடாதே. உன் வீட்டிற்கும் அடிக்கடி கடிதம் போடு. அம்மாவை மார்க்கெட்டில் பார்த்தேன். நீ அடிக்கடி கடிதமெழுதுவதில்லை என்று சலித்துக்கொண்டார்கள். நீ எப்பொழுது வேலூர் வருகிறாய்?

உன் அக்கா.



செப்டம்பர் 30, 1978

அன்புள்ள அக்கா,

இப்போதுதான் நீங்கள் fan என்று எழுதியது புரிந்தது. அப்படித்தான் ஒவ்வொருவர் பின்னும் ஓடுகிறார்கள். அசிங்கமாக இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு விளக்கு அணைந்துவிட்டதென்று பக்கத்து ரூமிற்கு தீப்பெட்டி வாங்க டார்ச்லைட் எடுத்துக்கொண்டு சென்றேன். எனக்கு திடீர் அதிர்ச்சி. இரண்டு பிள்ளைகளும் ஒரே கட்டிலில் கட்டிப்பிடித்துக்கொண்டு படுத்திருந்தார்கள். நான் ஓடியே வந்துவிட்டேன். என்னக்கா இது?

உங்கள் கடிதம் எனக்குப் புது உற்சாகமூட்டியது. திரும்பத் திரும்ப வாசித்தேன். அதற்குள் பல சிநேகிதிகளைச் சம்பாதித்துவிட்டேன். இப்போது என் முறுக்கைத் தின்னவாவது என் ரூமிற்கு அடிக்கடி வந்து போகிறார்கள். எப்படியோ வந்தால் சரி. மெஸ்ஸில் வேலை செய்யும் 6 பிள்ளைகள் உண்டு. அவர்களிடம் பேசினேன். நன்றாகக் கேட்டார்கள். ஒரு பிள்ளை மிகவும் அழுதாள். ரூமிற்கு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறாள். அவளுக்காக நமது prayer cellஇல் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஆர்த்தி மிகவும் சோர்ந்திருக்கிறாள். பீரியட்ஸ் வரவில்லை, பயமாக இருக்கிறது என்றாள். நீங்கள் ஏற்கனவே எனக்குச் சொல்லியிருக்கிறபடியால், பயப்படாதே அப்படித்தான் இருக்கும்; சரியாகிவிடும் என்று சொன்னேன். இப்போது சந்தோஷமாயிருக்கிறாள்.

ELS சென்றிருந்தேன். நீங்கள் சொல்லிய Open Bible ஒன்று வாங்கினேன். லெதர் கவர், கோல்டன் எட்ஜ், அழகாக இருக்கிறது. உண்டியல் காசும் அப்பா இம்மாதம் அனுப்பிய பணத்தில் கொஞ்சமுமாகப் போட்டு வாங்கி விட்டேன். படிக்கக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. ஆனாலும் தொடர்ந்து படிக்கிறேன்.

என் தங்கையை எப்பொழுதாவது முடியுமானால் போய்ச் சந்தியுங்கள் அக்கா. உங்களைத் தொந்தரவு செய்ய எனக்கு மனமில்லை. ஆனால் அவளுடைய வாழ்க்கையை நினைக்கும்போது கவலையாயிருக்கிறது.

இப்படிக்கு,
மாலா

அக்டோபர் 6, 1978

Dear Mala,

உன் சிநேகிதி ப்ரீத்தி இப்போது சனிக்கிழமை ஜெபத்திற்கு வருவதை நிறுத்திவிட்டாள். பின்வாங்கியிருக்கிறாள். என்னைப் பார்த்தாலும் பார்க் காததுபோல நழுவி விடுகிறாள். நீ லீவில் வரும் போது அவளைச் சந்திப்பது நல்லது. எதுவும் காட்டிக்கொள்ளாமல் அவளுக்குக் கடிதமெழுது.

நீ கண்ட பாவத்தைத்தான் *lesbianism* அல்லது பெண்புணர்ச்சி என்று சொல்வார்கள். எச்சரிக்கையாய் நடந்துகொள். இந்தப் பாவத்திற்கு அழைக்கும் பெண்களை விட்டு விலகு. இப்பாவத்தில் சிக்கிக்கொண்டால் மீளுவது கடினம். ரோமர் 1:26இல் குறிப்பிட்டுள்ளது இந்தப்பாவம்தான். “இதினிமித்தம் கடவுள் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்.” உன் பக்கத்து ரூம் சிநேகிதிகளுக்குச் சில ஆலோசனைகளைக் கூறு.

1. அவர்கள் அதைப் பாவம் என்று உணர்ந்து அதிலிருந்து விடுபட வாஞ்சிக்க வேண்டும், வழிதேட வேண்டும்.
2. அவர்களிருவரும் ஒன்றாயிருப்பதைத் தவிர்க்கவேண்டும்.
3. சோம்பலாயிராமல் எப்பொழுதும் சுறுசுறுப்பாயிருக்கவேண்டும்.
4. அவர்கள் தங்களைத் தாங்களே குற்றப்படுத்தி சோர்புறுவதை நிறுத்தி, இயேசு விடுவிக்கிறவர் என்பதை நம்பி, அவரைச் சார்ந்துகொள்ள வேண்டும்.

ஆர்த்தியை check-upக்குப் போகச் சொல்லு. ஒருவேளை அவள் கர்ப்பந்தரித்திருப்பாள். மணமாகாத தாய்மார் இன்றைய மாணவியர் உலகில் ஏராளம். இதனால்தான் எக்காரணத்தை முன்னிட்டும் வாலிபருடன் செல்லவோ அவர்களுடன் தனியே இருக்கவோ சம்மதிக்கக் கூடாதென்பது.

இன்னொரு காரியம். Drug addictionக்கு (அடிமைப்படுத்தும் போதை மருந்துகள்) எச்சரிக்கையாயிரு. மாத்திரைகளை யார் கொடுத்தாலும், ஒரே ஊசி மட்டும் போட்டுப்பார் என்று வற்புறுத்தினாலும் ஆசைக்குக்கூட எப்படியிருக்கிறதென்று பார்க்கலாமே என்றுகூட போட்டுக்கொள்ளாதே. இவ்வித போதை மருந்துகளுக்கு அடிமையாகிவிட்டால் விடுதலை அபூர்வம். விடுதலை கிடைத்தாலும் உடற்சேதம் வரும்.



இப்படிப்பட்ட பிள்ளைகளையெல்லாம் பார்க்கும்போது ஒரு வெறுப்பு தோன்றுகிறதல்லவா ? ஆனால் அநேக பிள்ளைகளுக்கு உனக்கும் எனக்கும் இருந்ததுபோன்ற பாதுகாவலான சூழ்நிலைகள் வாழ்க்கையில் இருந்தது கிடையாது. இவர்களது பெற்றோரும் இவர்களைச் சரியாகக் கவனித்திருக்க மாட்டார்கள். பெரும்பாலும் வீட்டில் அன்பையும் அரவணைப்பையும் பெறத் தவறிய இளம் உள்ளங்களே தங்கள் தேவைகள் இவ்விதத் தவறான வழிகளில் சந்திக்கப்படப் பலியாகின்றன. ஆகவே இவர்களுக்காய் மனம் வருந்து, செயல்படு. கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்.

இன்று நிலா கடிதம் வந்தது. “காரைக்குடி வாலிபர் ஊழியங்களைக் குறித்துக் கேள்விப்படும்போது நான் அங்கு இல்லையே என்று வருந்துவேன். ஆனால் இப்போது, தமிழ்நாடுபோல சூரத் மாற வேண்டுமே என்று ஜெபிக் கிறேன்” என்று எழுதியிருக்கிறாள். காலேஜில் ஜெபக்குழு அமைக்க மிகவும் பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கிறாள்; இன்னும் ஒன்றும் சரியாக வரவில்லையாம். ஜெபித்துக்கொள்.

நீ வரும்போது ELSஇல் Ann Judson வாழ்க்கை வரலாறு எனக்கு ஒரு copy வாங்கி வா. பிள்ளைகள் யாரோ வாங்கிப் போனது போயே போய்விட்டது. கண்டுபிடிக்க முடியவில்லை.


இக்கடிதத்தை அவசரமாக எழுதுகிறேன். நாங்கள் long tour போகிறோம். ஆகவே இரண்டு மாதம் கழித்துக் கடிதமெழுது.

இப்படிக்கு,
அக்கா.

# 19 சபாஷ் மாலா!

டிசம்பர் 7, 1978

அன்புள்ள அக்காவுக்கு,



இரண்டு மாத news விவரமாக எழுதுங்கள். இங்கு நான் சுகம். நிறைய news உண்டு.

அக்கா நீங்கள் எனக்கு கடைசியாக எழுதிய கடிதத்தின் குறிப்புகள் பயனுள்ளதாயிருந்தன. இப்போதுதான் ஒவ்வொன்றையும் நேரடியாகக் காண்கிறேன். நிசமாகவே முதலில் எனக்கு இந்தப் பிள்ளைகள் மேல் ஒரு அருவருப்பும் வெறுப்பும்தான் ஏற்பட்டது. எங்காவது ஓடிவிடலாமா என்றிருந்தது. உங்கள் கடிதம் வந்த அன்று ஆவியானவர் என்னோடு பேசினார். இப்பிள்ளைகளை நினைத்து முழங்காலில் நின்று அழுதுகொண்டேயிருந்தேன். ஜெபிக்கக்கூட இல்லை. அன்றிலிருந்து தொடர்ந்து கரிசனையோடு செயல்படுகிறேன்.

அந்தக் கிச்சன் கலாதான் என் முதற்கனி. ரூமிற்கு வந்தாள், ஒப்புக் கொடுத்து ஜெபித்தாள். நன்றாக இருக்கிறாள். ஒவ்வொரு சனிக்கிழமையும் சேர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தோம். இந்த இரண்டு மாதத்தில் 3 பேர் இரட்சிக்கப்பட்டுவிட்டனர். இரண்டு விசுவாசிகளையும் கண்டுபிடித்தேன். இப்போது 6 பேரும் கூடி ஜெபிக்கிறோம்.

சுபாஷினி என்று ஒரு விசுவாசி அக்கா. III Yr. B.A. அண்ணன் ஜீவானந்தம் கூட்டத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள். இப்போது வீட்டில் திருமணம் ஒழுங்கு செய்கிறார்கள். அத்தைப் பையனாம். அவருடைய இரட்சிப்பிற்காக அதிகம் ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம் இது தவறு என்று எப்படிச் சொல்ல ? நல்ல பையன் என்று சொல்லுகிறார்கள்.

நாங்கள் போகும் கோயிலில் youth meetingஇல் பேச உங்கள் கல்லூரிப் பிள்ளைகள் யாராவது வருவார்களா என்று பாஸ்டர் ஐயா கேட்டதற்கு பிள்ளைகள் என் பெயரைச் சொல்லிவிட்டார்கள். நானும் ஒத்துக்கொண்டேன்.



பிரசங்கி 12:1இல் ஆயத்தம் செய்து சென்றேன். சுமார் 20 வாலிபப் பிள்ளைகள். 15-18 yrs. அவர்களைப் பார்த்தவுடன் பிரசங்க வாக்கியத்தை ஆரம்பித்தேனே ஒழிய பிரசங்கத்தைச் செய்யாமல் அந்த வசனத்தைத் தழுவி என் சாட்சியையே முழுவதும் சொன்னேன். பயமெல்லாம் எங்கு போனதோ தெரியவில்லை. திடீரென்று நேரத்தைப் பார்த்தால் ஒரு மணி நேரம் கடந்துவிட்டிருந்தது. அன்று கர்த்தர் ஆச்சரியமாக அசைவாடினார். டிசம்பர் கடைசியில் Youth Rallyயாம். அங்கு வந்து என் சாட்சியைச் சொல்லும்படி பாஸ்டர் ஐயா கேட்டுக்கொண்டார்கள். எனக்கு அதிக உற்சாகம். கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்கிறேன்.

இன்னும் நிறைய செய்தி உண்டு. நான் கிறிஸ்மஸ் லீவில் வீட்டிற்கு வரும்போது சொல்கிறேன். நம்முடைய மிஷனரி ஊழியத்தைக் குறித்து ஜெபக்குழுவில் சொன்னேன். மூவர் மாதா மாதம் காணிக்கைத் தருவார்கள். அதில் மெரினா என்பவள் மாதா மாதம் குறைந்தது 5,6 சினிமா பார்ப்பாளாம். ஆகவே தேவன் தன்னை இரட்சித்ததற்கு நன்றிக் காணிக்கையாக அந்தப் பணத்தையும், *கல்கி, குமுதம்* பணத்தையும் சேர்த்து ரூ.25/– ஒவ்வொரு மாதமும் தருவேன் என்று சொன்னாள். இம்மாதம் என்னுடைய காணிக்கை ரூ.10/– சேர்த்து ரூ.42/– M.O. அனுப்புகிறேன்.

நிலா address அனுப்பித்தரவும். நான் வருமுன் ஒரு கடிதமாவது போடவும்.

அன்புள்ள,
மாலா.

# 20 வானவில்



"அக்காாாா."

"ஐ மாலு, சுகமா ?"

"ஏங்க்கா கடிதமே போடவில்லை ?"

"அதான் இப்ப வந்து விடுவாயே, நேரில் பேசிக்கொள்ளலாம் என்றுதான்."

அளவுக்கு மீறிய உற்சாகம். நான் சலித்துப்போகும்வரை தன் சாதனைகளை எல்லா விபரங்களோடும் சொன்னாள்.

"ஏன் இப்படி வாள் வாளென்று கத்துகிறாய். எனக்குக் காது கேட்கும். கொஞ்சம் மெதுவாகப் பேசு. அதுதான் பெண்களுக்கு அழகு."

"சரி கேளுங்க."

சுற்றிச்சுற்றி கடைசியில் சுபாஷினி விஷயத்திற்கு வந்தாள்.

"அக்கா, ஏங்க்கா, அது தப்புதானே. அவர் சிகரெட் பிடிக்கமாட்டாராம். சினிமாவுக்குப் போகமாட்டாராம். தப்புத்தண்டா கிடையாதாம். தவறாமல்



கோயிலுக்குப் போவாராம். தானுண்டு வீடுண்டு என்று இருப்பாராம். இரட்சிக்கப்பட்டவர்களைவிட மிக நல்லவராம். இதற்கு என்னக்கா சொல்லுவது ?"

"இதெல்லாம் உனக்குத்தான் தெரியுமே மாலா. கெட்டவன் நல்லவன் என்பதற்கும், அவிசுவாசி விசுவாசி என்பதற்கும் சம்பந்தமில்லை. நல்லவன் சுயநீதியைத் தரித்தவன்; விசுவாசி தேவநீதியைத் தரித்தவன் (ஏசா 64:6). ஒருவன் மறுபடி பிறந்திராவிட்டால் கடவுளுடைய இராஜ்யத்தானல்ல. இவள் ஒளியிலிருக்கிறாள், அவன் இருளிலிருக்கிறான். இவர்கள் இருவருக்கும் சம்பந்தமேது ? ஐக்கியமேது ? பங்கேது ? கடுமையாகத் தெரிந்தாலும் வேதம் இவ்வளவு கண்டிப்பாகத்தான் சொல்கிறது. 2 கொரிந்தியர் 6:14-18 எடுத்து வாசி. கழுதையையும் மாட்டையும் சேர்த்து உழக்கூடாது என்று வேதம் சொல்கிறது. கடவுளுடைய வயல் நிலத்தில் வேலை செய்ய அவருடைய ஏர்நுகத்தில் ஒரு பக்கம் கழுதையையும் ஒருபக்கம் மாட்டையும் பூட்டினால் வேலை எப்படியாகும் ? ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கம் இழுக்கும். இங்கு தவறிய அநேக நங்கையர் கடவுளுடைய இராஜ்யத்திற்குப் பயனற்று மங்கிப் போயினர். நீ மட்டும் இந்தத் தவற்றைச் செய்து விடாதே. இப்பொழுதிலிருந்தே உன் வாழ்க்கைத் துணைவனுக்காய் ஜெபிக்க ஆரம்பித்துவிடு. உனக்குத் தேவன் ஒரு தரிசனமும் வாழ்க்கையில் நோக்கமும் கொடுத்திருக்கிறார். ஆகவே கர்த்தருக்காய் வைராக்கியமுள்ள ஒருவரையே நீ மணக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்."

"சரிக்கா, சுபாஷினிக்குக் கடவுளுடைய சித்தத்தை அறிந்து கொள்வது எப்படி என்று சொல்வது ?"

"இந்த விஷயத்தில் மட்டுமல்ல, எந்தக் காரியத்திலுமே கடவுளுடைய சித்தத்தை அறிவதில் மூன்று காரியங்களை நினைவிற்கொள்."

### 1. வசனம்

வசன அடிப்படையில் பார்த்தால் அவிசுவாசி என்றதுமே கண்ணை மூடிக்கொண்டு "No" சொல்லிவிடலாம். யாரும் தீர்க்கதரிசனமே சொன்னாலும் அதற்குப் பயந்து கீழ்படியத் தேவையில்லை. ஏன் சொல்கிறேனென்றால் இந்நாட்களில் பல so called தீர்க்கதரிசிகள் வீடு வீடாகப் போய்த் தீர்க்க தரிசனம் சொல்லி கடவுளுடைய பிள்ளைகளையும் குழப்பிவிடுகிறார்கள். திருமணக் காரியத்தில் மட்டுமல்ல, எந்தக் காரியத்திலுமே வசனமே முதல் ஆதாரம். வசனத்தை ஒழுங்காகப் படி, நீ வஞ்சிக்கப்பட்டுப் போகமாட்டாய்.

**2. ஆவியானவரின் நடத்துதல்**

வசன அடிப்படையில் நாம் கடவுளுடைய வழிநடத்துதலுக்குக் காத்திருக்கும்போது, ஆவியானவர் உள்ளத்தில் பேசுவது மிகுந்த சமாதானத்தையும் இருதயத்தில் அமைதியையும் தரும். அவர் குழப்பத்தின் கடவுளல்லவே.

**3. சூழ்நிலைகள்**

சங் 37:4,5இல் சொல்லப்பட்டிருப்பதுபோல "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்." வசன வெளிச்சமும் ஆவியானவரின் நடத்துதலும் ஒத்திருக்கும்போது சூழ்நிலைகள் மாறாயிருந்தால் தேவகிருபை நாடி ஜெபிக்கவேண்டும். சூழ்நிலைகள் கடவுளுடைய கரத்திலிருக்கின்றன. அவர் சூழ்நிலைகளைச் சாதகமாக்குவார்.

ரெபெக்காள் அந்நிய தேசத்திலிருந்த பெண்ணாயிருந்து, அவிசுவாசிகளால் சூழப்பட்டிருந்தும், பெற்றோர் எவ்வித முயற்சியும் எடுக்காமலிருந்தும், ஆபிரகாமோ, ஈசாக்கோ, எலியேசரோ அவளைப்பற்றிக் கொஞ்சமும் கேள்விப்படாதிருந்தும் இருவரும் வனாந்தரத்தினால் பல மைல்கள் பிரிக்கப்பட்டிருந்தும் இணைக்கப்படக் கூடுமானால் திருமணக் காரியத்தில் என்னதான் அற்புதம் நாம் எதிர்பார்க்கக் கூடாது!"

"அக்கா, ஒண்ணு கேப்பேன். பொய் சொல்லாம சொல்லணும்."

"என்ன கேப்பாய் என்று எனக்கு நல்லாத் தெரியும். என்ன ?"

"நீங்க எப்படி அண்ணனைக் கட்டினீங்க ?"

"அதுவும் ஓர் அற்புதம்தான். என் பெற்றோர் டாக்டர் மாப்பிள்ளை தேடினார்கள். கடவுளுடைய சித்தமோ வேறுவிதமாயிருந்தது. அவருடைய வழிகளும் அவருடைய நினைவுகளும் நம்முடைய வழிகளையும் நினைவுகளையும் விட எவ்வளவோ உயர்ந்தவைகள். என் அக்காவும் அத்தானும் ஒரு ஹார்பரில் இருக்கிறார்கள். அத்தான் எஞ்சினீயர். அப்போது அண்ணன் அங்கு ஹார்பர் trainingக்காக சென்றிருக்கிறார்கள். அத்தான் இவர்கள் பேசுவதையும் meetings நடத்துவதையும் பார்த்துவிட்டு என் பெற்றோருக்கு, எனக்கு ஏற்ற துணை இவர்தான் என்று எழுத, காரியம் முடிந்தது.




"இன்று, நான் காத்திருந்த நாட்களும் கண்ணீர்விட்ட வேளைகளும் எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. கடும் காற்று வீசியது, பெருமழை பெய்தது, மின்னலும், இடியும், கார்மேகங்களும் முழங்கின. ஆனால் அவை பிறப்பித்தது வானவில்லையே! இன்று என் கணவரை நினைக்கும்போது கடவுளுக்கு அதிகமாக ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்."

"ஓஹோ, வேறு எப்படியாவது இருக்கும் என்று நினைத்தேன்."

"நீ நினைப்பாய், ஏன் நினைக்கமாட்டாய்!"

வானவில்லுக்கடியில் வாழவேண்டிய பல பெண்கள் இன்று கான முள்ளில் சிக்கித் தவிப்பது எத்தனை பரிதாபம்!

# 21 என்ன செய்ய?



ஜனவரி 20, 1979

அன்புள்ள அக்கா,

கிறிஸ்துமஸ் லீவ் ஓடிவிட்டது. நாள் போனதே தெரியவில்லை. எல்லாரையும் சந்தித்தது நன்றாக இருந்தது. 1ஆம் தேதி டயரியை எடுத்து ஒவ்வொரு காரியத்திற்காகவும் ஸ்தோத்திரம் செலுத்தினேன். பழைய சிநேகிதிகள் யார் யாரைச் சந்திக்க முடியுமோ எல்லாரையும் சந்தித்தேன். நளினி ராஜஸ்தான் போய்விட்டாள். கடிதம் போட்டிருக்கிறாள். இந்தியில் tracts and gospels கேட்டு எழுதியிருக்கிறாள்.

எங்கள் ஜெபக்குழுவில் சில பிரச்னைகள் உண்டு—

1. நீங்கள் இங்கு வந்தபோது லைலா என்ற பிள்ளையை அறிமுகப் படுத்தினேன், ஞாபகம் இருக்கிறதா? ஒல்லியாக கண்ணாடி போட்ட பிள்ளை? அவள், "இரண்டு வாரங்களாகப் பாவங்களை அறிக்கையிட்டுக்கொண்டே யிருக்கிறேன். பாவங்களை அறிக்கையிடும்போது சிலர் அழுது அறிக்கை யிடுவதுபோல எனக்கு அழுகை வரவில்லை. இரட்சிக்கப்பட ஆசையாக இருக்கிறது. ஆனால் இன்னும் இரட்சிக்கப்படவில்லையே" என்கிறாள்.

2. மீரா என்ற பெண் என் class mate. அவள் ஜெபத்திற்கு வருவதை நிறுத்திவிட்டபடியால் பார்க்கச் சென்றேன். ஒரே அழுகை. "நான் பயங்கரமான பாவம் செய்துவிட்டேன். என் இரட்சிப்பை இழந்துவிட்டேன்" என்று அழுகிறாள். என்னென்னவோ சொல்லிப் பார்க்கிறேன்.



3. இரட்சிக்கப்பட்ட சரஸ்வதி வீட்டிற்கு லீவுக்குச் செல்கிறாள். என்ன ஆலோசனை சொல்ல?

4. TV பைத்தியங்களுக்கு என்ன சொல்ல?

நான் இங்கு வருமுன் சொல்லிவிட்டுப் போக வந்தேன். நீங்கள் வீட்டிலில்லாததால் பார்க்க முடியாமல் போய்விட்டது. உடனே பதில் போடவும்.

மாலா.

பிப்ரவரி 21,1979

அன்புள்ள மாலா,

உன் கடிதம் கிடைத்தது.

1. இரட்சிப்பின் அனுபவம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கும். சிலர் ஆனந்தத்தால் பொங்கி வழிவர். சிலர் அமைதியாய் ஏற்றுக்கொள்வர். சிலர் கண்ணீரோடு பாவங்களை அறிக்கையிடுவார். சிலர் அமைதியாய் அறிக்கையிடுவர். இது நமது emotional make-up. அதாவது ஒவ்வொருவருடைய மன அமைப்பைப் பொறுத்ததேயன்றி வேறல்ல. இதனால் இரட்சிப்பின் தரம் வேறுபடுவதில்லை. நான் சொல்வது புரிகிறதா? அதாவது அழுது அழுது அறிக்கையிடுவதாலோ இரட்சிக்கப்பட்டபின் ஆனந்தத்தால் குதிப்பதாலோ அவர்கள் நன்றாக அல்லது ஆழமாக இரட்சிக்கப்பட்டவர்கள் என்பதில்லை; அமைதியாக அறிக்கை செய்து அமைதியாக இருப்பவர்கள் சரியாக இரட்சிக்கப்படவில்லை என்பதும் கிடையாது. "விசுவாசத்தினால்" நீதிமான் பிழைப்பான் என்றெழுதியிருக்கிறது. ஆகையால் லைலாவுக்கு 1 யோவான் 1:7-9, ரோமர் 10:10,17 காண்பித்து வழிநடத்து.

2. மீரா சொல்வது எப்படி இருக்கிறதென்றால் பிள்ளை தப்பு செய்து விட்டால் நான் என் அப்பாவுக்குப் பிள்ளையில்லை என்று அழுதது போலிருக்கிறது. நமது புத்திர சுவிகாரத்தை நாம் ஏதோ பாவம் செய்ததும் இழந்து போவதில்லை. இரட்சிப்பு நமது வாழ்க்கையைப் பொறுத்து மாறு வதில்லை. ஆனால் பாவம் செய்யும்போது கடவுளைத் துக்கப்படுத்துகிறோம். நமது இரட்சிப்பின் மகிழ்ச்சியை இழக்கிறோம். ஆகையால்தான் தாவீது

"உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தை திரும்பவும் எனக்குத் தந்து" என்று எழுதுகிறார். சங்கீதம் 51 வாசித்து, தாவீது பாவம் செய்தபின் எப்படி அவன் மனம் நொந்து பாவ அறிக்கை செய்தான் என்றும் தேவன் அவனை எப்படி மன்னித்துச் சேர்த்துக் கொண்டார் என்றும் அவளுக்கு விளக்கு. பாவத்தில் தவறி விழுவது வேறு, பாவத்தில் நிலைத்திருப்பது வேறு என்பதை அவள் புரிந்துகொள்ளவேண்டும். "ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" என்று யோவான் எழுதுகிறார். அதை ஏன் எழுதுகிறார் ? "என் பிள்ளைகளே, நீங்கள் பாவம் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்" என்கிறார்.

3. வேறு மதப் பின்னணியிலிருந்து வருபவர்கள் கிறிஸ்துவுக்காய்ச் சாட்சி களாய் நிற்பது பெரும் சவால்தான். இப்பிள்ளைகளை வீட்டிற்குப் போகும்போது பெற்றோரிடம் ஒரு புது அன்புடனும், அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும், கீழ்ப்படிதலுடனும், வீட்டில் உதவி செய்கிறவர்களாகவும் நடந்துகொள்ளச் சொல். ஆனால் கடவுளுக்குரிய காரியங்களில் அமைதியோடும் பணிவோடும் தங்கள் சாட்சியைக் கூறி உறுதியாய் நிற்கத்தான் வேண்டும்.

4. சரியாகப் பயன்படுத்தப்பட்டால் TV நல்லதுதான். எது நல்லது எது கெட்டது என்று பகுத்தறிந்து பார்க்கவேண்டும். TV பார்க்கும்போது மூன்று காரியங்களை நினைவில் கொள்வது நல்லது.

அ) பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் TV பார்க்கக்கூடாது.


ஆ) அதிகமாக TV பார்ப்பதினால் நேரத்தை வீணாக்கி உடல்நலத்தைக் கெடுத்துக்கொள்ளக்கூடாது.

இ) படிப்பிற்கும் ஜெப தியானத்திற்கும் கொடுக்கவேண்டிய நேரத்தை TV அபகரித்துவிடக்கூடாது.

இம்மூன்றையும் நினைவில் வைத்துக்கொண்டால் உன் மனச்சாட்சி எப்போது என்ன பார்க்கலாம் என்று போதிக்கும்.



# 22 சங்கீதம்



வேலையாகச் சென்னை சென்றபோது கிடைத்த ஒரு மணி நேரத்தில் மாலாவை எட்டிப் பார்த்து விடலாமென்று ஓடினேன். கேண்டீ னுக்குச் சென்றுகொண்டிருந்தவள் ஓடோடி வந்தாள்.

"அடேயக்கா, மழைதான் வரப்போகிறது."

"அப்படியாவது மழை வரட்டும்."

"வாங்க கேண்டீனுக்குப் போய்க் கொண்டே பேசலாம்."

பேச்சு சுவாரஸ்யத்தில் மசால் தோசை ருசி தெரியவில்லை.

"ரூமுக்குப் போகலாம்."

"எங்கே பாட்டுச் சத்தம் கேட்கிறது ?"

"ஏதோ prayer நடக்கிறது."

"ஏன் நீ போவதில்லையா ?"

"எனக்கெல்லாம் அது ஒத்துப்போகாது."

"மாலா, நீ ஒரு விசுவாசி என்று சொல்லிக்கொண்டு தனியே நிற்பது சரியல்ல. கிறிஸ்துவின் உடலில் நீ ஓர் அங்கமல்லவா ? இயேசு கிறிஸ்துவின் போதனை கூட்டு வாழ்க்கைதான். Body concept. இருக்கிற 20% கிறிஸ்தவர்களும் தனித்தனியே நின்றால் எப்படி ? கிட்டாரும், பாங்கோசும், அக்கார்டியனும் தனித்தனியே ஒலித்தால் எப்படி இருக்கும் ? சேர்ந்து ஒலித்தால்தானே சங்கீதம் ? தேவன் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு இசை ஒலிக்க எழுப்பியுள்ளார். ஆகவே பரந்த மனப்பான்மையுடன் இரு."

"அவர்களுக்குள்ளேயே ஒருமனப்பாடு கிடையாது. சண்டை போட்டு சிண்டைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்."

"பிற விசுவாசிகளைக் குறைகூறிப் பிரிந்து நில்லாதே. எங்கேதான் ஒருமனப்பாடு உண்டு? சொல்லு பார்ப்போம். உனது ஐக்கியம் தேவப்பிள்ளைகள் எல்லாரோடும் இருக்கவேண்டும். உலகத்திலிருந்து நாம் பிரிக்கப்படுகிறோம். அது வேறுபிரிதல் (separation). ஆனால் விசுவாசிகளின் ஐக்கியத்திலிருந்து பிரிந்து தனித்திருத்தல் seclusion. வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்யும். மாணவரை ஆதாயப்படுத்தும் பணியில் பல்வேறு இயக்கங்கள் இணைந்து செயல்பட்டால்தான் வெற்றி கிட்டும்."

டாப்பிக்ஸ் மாறின. பேசி முடிக்குமுன் நேரமாகி விட்டது. 109A பிடித்து வேர்த்து விறுவிறுத்து மங்களூர் எக்ஸ்பிரசில் வீடுவந்து சேர்ந்தேன்.



# 23 கதாநாயகனைக் காணோமே!



ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தன. மாலாவும் வெற்றியோடு தேறினாள். கதாநாயகனோ வந்து சேரவில்லை.

"வீட்டில் ஒரே பிரச்னை. ஒரே ஏச்சும் பேச்சும்தான். இத்தனை கண்டிஷன் போட்டால் எவண்டி உன்னைக் கட்டு வான் என்கிறார்கள். பல கடிதங்கள் வருகின்றன. முன்பின் சொல்லாம லேயே வீட்டில் வந்து இறங்கிவிடு கின்றனர்."

"சரி இப்போ என்ன?"

"எனக்கும் வயதாகிறது. நீங்கள் சொன்ன குறிப்புகளையெல்லாம் டயரியில் குறித்து வைத்திருக்கிறேன். வாசித்து என்னையே திடப்படுத்திக் கொண்டு ஜெபிக்கிறேன். ஆனால் நெருக்கப்படும்போது என் will powerரே உடைந்து போகிறது. நேற்று ஒரு கடிதம் வந்தது. என் கசின் கனடாவிலிருக்கிறார். அவர் அப்பா எழுதியிருக்கிறார். ஒரே வசனங்களாகத்தான் எழுதியிருக்கிறார். ரொக்கமே வேண்டாம், கட்டிக் கொடுத்தால் போதுமென்கிறார்கள். எனக்குத் தெரிந்தளவிற்கு இவர் இரட்சிப்பிற்குத் தூரமானவரல்ல."

"ஓகோ, பக்கத்திலிருக்கிறாராக்கும். இந்த பக்கத்து இரட்சிப்பு தூரத்து இரட்சிப்பு எல்லாம் எந்த தியாலஜிக்கல் காலேஜில் படித்தாய்?"

"நான் ஒன்றும் பாசிடிவ்வாகச் சொல்லவில்லையக்கா. ஒரு வேளை கனடா போனபிறகு இரட்சிக்கப்பட்டிருக்கலாம். உங்களுக்கு ஏதாவது வெளிப்பாடு இருக்குமோ என்று நினைத்தேன்."

"ஆமாமாம், நிறைய வெளிப்பாடு இருக்கிறது. இப்படி உட்காரு சொல்லுகிறேன். இந்தக் கதைய கேளு.

“பூவாள் என்றொருத்தி இருந்தாளாம். அவளுக்குக் கடவுள் தனக்கு இஷ்டமானவனாகவும் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம்பண்ணிக் கொள்ளலாம்” (1 கொரி 7:39; எண் 36:9) என்று இஷ்டப்படுவதற்குச் சுதந்திரமும் கட்டிக்கொள்ள கண்டிஷனும் போட்டாராம். பொல்லாத சர்ப்பம் வந்ததாம். அது காத்திருந்து களைத்துப்போன அவளை நோக்கி: நீ உலகத்திலுள்ள யாரையுமே திருமணம் பண்ணக் கூடாதென்று கடவுள் சொன்னது உண்டோ என்று கேட்டதாம். கடவுளுடைய வார்த்தையை நன்கறிந்த அவள் வீணாகச் சர்ப்பத்தோடு உறவாட ஆரம்பித்தாளாம்.

“நாங்கள் உலகத்தில் யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்யலாம். ஆனால் உலகத்தின் மையத்தில் வாழும் அவிசுவாசியைக் குறித்து கடவுள்: நீ அந்நிய நுகத்திலே அவிசுவாசியோடே பிணைக்கப்படாதிருப்பாயாக. தொடாதே (2 கொரி 6:14,17), நீ சாகாதபடிக்கு அவனை மணக்கவும் வேண்டாம், தொடவும் வேண்டாம் (ஆதி 3:3) என்று சொன்னார் என்று சொன்னாளாம். அப்பொழுது சர்ப்பம் பூவாளை நோக்கி: நீ சாகவே சாவதில்லை. நிச்சயமாய் உன் ஊக்கமான ஜெபத்தினால் அவனை இரட்சித்துக் கொள்ளுவாய். நீ அவனை மணக்கும் நாளிலே உன் கண்கள் திறக்கப்படும் என்றும் நீ கடவுளைப்போல பறந்து கனடா செல்வாய் என்றும் தேவன் அறிவார் என்றதாம்.

“அப்பொழுது பூவாள் அந்தப் பையன் வாழ்க்கைக்கு நல்லவனும், பார்வைக்கு இன்பமும், பட்டம் பெற்ற ஞானியுமாயிருக்கிறான் என்று கண்டு கழுத்தை நீட்டித் தாலிகட்ட விட்டாளாம். அவனும் மணந்தானாம். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டதாம். கண்கள் திறந்தவுடன் கண்ணீர் கொட்டியதாம். என்ன புரியுதா ? கம்முன்னு இருக்கியே ?”

“பிறகு என்ன ஆச்சாம் ?”

“என்ன ஆச்சாம். ஒருவரையொருவர் புரிந்து கொண்டார்களாம். தவற்றை உணர்ந்துகொண்டார்களாம். கணவனை இரட்சிக்கும் மனக்கோட்டை தவிடு பொடியானதாம். 4000 வருஷம் பழமையான தப்பையே செய்துவிட்டேனே என்று தலையிலடித்துக்கொண்டாளாம். கதையும் முடிஞ்சு போச்சுதாம். கத்தரிக்காயும் காச்சுதாம்.

“இந்தப் பாரு. இந்தமாதிரி கலியாணத்திலெல்லாம் கத்தரிக்காய்தான் காய்க்கும். அவைதான் சாபமும் (எண் 2:56-9; 31:16), பாவமும் (நெகே 13:26), கடவுள் பயமற்ற பிள்ளைகளுமாம். லேவி 24:10,11. எடுத்து வாசி.



“காத்திருந்ததே காத்திருந்தாய், கடைசியில் கோட்டை விட்டு விடாதே. பெற்றோரிடத்தில் தடால் புடால் என்று பேசாதே. என்னைக் கல்லெறிந்து விடுவார்கள். அன்போடும் பணிவோடும் விளக்கு. ஆனால் உறுதியாக நில். மணம் முடிக்க மனந்திரும்பும் போலி இரட்சிப்புகளைக் குறித்து எச்சரிக் கையாயிரு. போய் ஆதாமைப் போல அமைதியாக இளைப்பாறு. நீ விழிக்கும்போது கடவுள் எல்லா ஆயத்தங்களையும் முடித்திருப்பார்.”

# 24 வந்தானையா மாப்பிள்ளை!

“ஹய், ஹலோ. அடட கலியாணக் கார்டா ?”

வாயெல்லாம் பல்லாக, கத்தைக் கார்டுகளுடன் பட்டுச் சேலை சலசலக்க காரை விட்டு இறங்கி வந்தாள் மாலா.

“எல்லாம் திடுதிப்பென்று முடிந்துவிட்டது. சொல்லவில்லையென்று கோபித்துக் கொள்ளாதீர்கள்.”

“மாப்பிள்ளை வந்த மர்மமென்ன மாலு ? போட்டோ இருந்தால் கொடேன் பார்க்கலாம்.”

Hand bagஐத் திறந்து பத்திரமாக பாலிதீன் கவரில் வைத்திருந்த போட்டோவைக் கொடுத்தாள்.

“அட ! இந்த ரிவைவல் மீட்டிங்கில் கிட்டார் போட்ட பையன் போலிருக்கிறது ?”

“ம்”

“ஒரு நாள் சாட்சி கொடுத்தானோ ?”

“நான் இரண்டாம் நாள் கொடுத்தேன். அவர் மூன்றாம் நாள் கொடுத்தார்.”
“ம் குட்டு வெளியாகிறது. மிஷனரியாக ஒப்புக் கொடுத்திருக்கானோ ?”

“ஆமாம்”

“M.A. இல்ல ?”

“ம் ம்”

“பெரிய மீனாகப் பிடித்திருக்கிறாயே. எப்படிப் போட்டாய் வலை ?”

“நானொண்ணும் வலை போடவில்லை, நான்தான் வலையில் மாட்டிக் கொண்டேன்.”



“நம்ப மாட்டேன்”

“நம்பாவிட்டால் போங்கள். அவர் அப்பா இரட்சிக்கப்பட்டவர். அவரும் கூட்டங்களுக்கு வந்திருந்தார். என்னப்பாவுக்கு class mate.”


“அப்புறம் ?”

“அப்புறம், சப்பரம்”

“கரெக்ட் மாலா. நாம் காதலில் விழக்கூடாது. காதல் நம் மேல் விழவேண்டும். God Bless You !”

“இது ஒண்ணும் காதலில்லை.”

“சரி. நீ வைக்கும் பெயரைத்தான் வைத்துக்கொள்ளேன்.”



தம்பதியர் கைகோர்த்து நடுவழியே நடந்து வந்தனர். நன்றாகப் பார்க்கும்படி ஓர வரிசையில் உட்கார்ந்திருந்தேன். தலை குனிந்து நடந்து வந்த மாலா, என்னருகே வந்ததும் கண்களை நிமிர்த்தி ஒரு வினாடி பார்த்துவிட்டு இமைகளைக் கீழே போட்டாள். அந்த ஒரு பார்வையில் ஆயிரம் கதைகள் மறைந்து கிடந்தன.

# 25 திசை திரும்பிய இரயில்!

மாலாவின் தாயார் பிளாட்பாரத்தில் நின்று அங்கலாய்த்துக்கொண்டிருந் தார்கள்.

"ஒற்றைக்காலில் நின்று தான் நினைத்ததைச் சாதித்துவிட்டாளே."


கோரமண்டல் எக்ஸ்பிரஸ் விசில் ஊதி மிஷனரிகளைச் சுமந்து கெம்பீர மாய்ப் புறப்பட்டது. மாலா ஜன்னல் வழியே கைநீட்டி என் கையை இறுகப் பற்றினாள்.

"இந்த இரயில் என் வாழ்க்கையின் முக்கியமான பாதையிலெல்லாம் ஓடுகிறது. திசைதான் திரும்பிவிட்டது."

அவள் கண்கள் கலங்கின. எனக்குத் தொண்டையில் என்னவோ அடைத்தது. சொல்ல வாயெடுத்தேன், சொல்ல வரவில்லை. உள்ளத்தின் ஆழத்தில் மூழ்கிவிட்டது.

"என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப் படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை."

ஊ ... ஊ ... ஊழியமே பிரதானம். உங்களுக்காக நான் காத்திருக்க முடியாது என்று சொல்லுவது போல ஊ ... ஊ ... என்று கூவி ஊர்ந்து சென்ற இரயில் எங்கள் கரங்களைப் பிரித்தது.



இப்புத்தகம்
உங்களுக்குப் பயனளித்ததுண்டானால்
தேவையிலிருக்கும் இன்னொருவருக்கு
வாசிக்கக் கொடுங்கள்.

நன்றி!

Printed by
Bapuji Printers
5 Kurban Ali Street
Woods Road
Chennai 600 002



## ஆசிரியரது பிற நூல்கள்—

- *அவள் தீர்மானங்கள்*
- *உலகில் உத்தமி*
- *குடும்பமே குடும்பம்!*
- *குதூகலக் கிறிஸ்தவம்*
- *சாத்தானுக்கு டாடா*
- *தெபொராளே, விழித்தெழு!*
- *தேவனே, நான் உமதண்டையில்...*
- *பயனுள்ள பாத்திரம்*
- *12 பொன் மாதங்கள்*
- *மண்ணிலே வெண்ணிலா*
- *முன்னேறும் கிறிஸ்தவன்*
- *வயது பதினாறிருக்கும்*
- *வாலிப உலகம்*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் பல இந்திய மொழிகளிலும் உண்டு.

**Blessing Literature Centre**
**21/11 West Coovam Road**
**Chintadripet**
**Chennai 600 002, India**
*Tel: 044-28450411*
**<bymliterature@vsnl.net>**

***கிறிஸ்தவ வாழ்வில் மறுமலர்ச்சி பெற***
***இன்றே வாசியுங்கள்...***

எழுப்புதலுக்கும் நற்செய்திப் பணிக்கும்
அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிகை!

உங்களை ஆசீர்வதித்து,
உங்களை உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும்,
நண்பருக்கும் ஆசீர்வாதமாக்கும் பத்திரிகை!

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,
தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் வெளிவருகிறது.

கீழ்க்கண்ட முகவரிக்கு ரூ. 500/– செலுத்தி *ஆசீர்வாதம்* பத்திரிகைக்கு ஆயுள் சந்தாதாரரானால், பணம் பெற்றுக்கொண்ட நாள் முதல் நாங்கள் வெளியிடும் பத்திரிகையையும், புத்தகங்கள் யாவற்றையும் பதினைந்து ஆண்டுகட்கு அனுப்பிவைப்போம்.

ஆண்டு சந்தா ரூ. 50/–

*சந்தா அனுப்பவேண்டிய முகவரி:*

Blessing Youth Mission
Church Colony
Vellore 632 006



# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு***
***1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,***
***ஒரு திருப்பணி***

❒

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❒

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❒

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❒

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம்,
குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய
மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப்
பகுதிகளிலும்
சபைகள் நிறுவுதல்.

❒

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் "*ஆசீர்வாதம்*" எனும் பத்திரிகை, புத்தகங்கள்
மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❒

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
**தொலைபேசி: 0416-2242943, 2248943**
<bym@sancharnet.in>
www.BlessingYouthMission.org